REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஓகஸ்ட் 17 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 91 இல. 194 | Thursday 17, August, 2023 | 12 பக்கங்கள் | 50/-




## GCE O/L பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணி நாளை ஆரம்பம்

### நூறு மத்திய நிலையங்களில் 27,500 ஆசிரியர் பங்கேற்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள், நாளை முதல் ஆரம்பமாகுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதி பரீட்சைகள் ஆணையாளர் லசிக சமரகோன் அது தொடர்பில் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் தெரிவித்ததாவது: மேற்படி மதிப்பீட்டு நடவடிக்கைகள் நாடளாவிய 04

## உலகுக்கு சீனா உண்மையான தலைமைத்துவத்தை வகிக்கிறது

### 07 ஆவது சீன தெற்காசிய மாநாட்டில் பிரதமர் உரை



சீனா உண்மையானதும் தீர்க்கமானதுமான உலகளாவிய தலைமைத்துவத்தை வகிக்கிறது. மனித இனத்தின் முன்னேற்றத்துக்காக, தெற்கு நாடுகளை நோக்கி தனது சாதானைகளை திருப்பி சர்வதேச பொருளாதார முறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை செய்துள்ளதாக பிரதமர் 04

## ஓமானுடன் இணைந்து விவசாய துறையில் புரட்சி

### தொடர்ச்சியாக ஒத்துழைக்கவும் ஒப்புதல்



நாட்டின் விவசாயத்துறையின் வளர்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இலங்கையும் ஓமானும் இணங்கியுள்ளன.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் இலங்கைக்கான ஓமான் 04

## அனுலா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் ஜனாதிபதி



நுகேகொடை, அனுலா வித்தியாலயத்தின் 2019/2020 ஆண்டுகளுக்கான பரிசளிப்பு விழா நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. ஜனாதிபதியுடன் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வன ஜீவராசிகள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோர் கல்லூரி அதிபர் வயோமி விஷாக்கா ராஜபக்ஷவினால் வரவேற்றக்கப்பட்டபோது.. (படம்: சுலோச்சன கமகே)

03
அதிகரிப்பதா? இடைநிறுத்துவதா?
**QR முறை குறித்து இறுதி தீர்மானம் அடுத்த வாரம்**

### நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி

# பெருந்தோட்டத் துறையை முன்னேற்ற புதிய திட்டம்

### கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்க வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு



**தேயிலை உற்பத்தி என்பது அரசின் ஆதரவுடன் கட்டமைக்கப்பட்ட தொழில் அல்ல. தனியார் மூலதனத்தைப் பயன்படுத்தி வெற்றி பெற்றவர்களின் தொழில் இது.**

தேயிலை உட்பட இலங்கையில் பெருந்தோட்ட தொழில்துறையை முன்னேற்றுவதற்கு புதிய வேலைத்திட்டம் ஒன்று தேவைப்படுவதாகவும், அது நவீன டிஜிட்டல் தொழினுட்பங்களை உள்ளடக்கிய சிறந்த வடிவமைப்பாக இருக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் (15) பிற்பகல் நடைபெற்ற கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கத்தின் 129 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பரந்த பங்களிப்பை வழங்குவதற்கு தேயிலை தொழில்துறைக்கு இன்னும் பலம் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அத்துறையில் உள்ள பிரச்சினைகளை அடையாளம் கண்டு, புத்தாக்கத்துடன் அதில் மாற்றத்தை ஏற்படுத்த தயாராக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை 04

பிரபாகரனின் மனைவி, மகள் உயிருடனா?

## மதிவதனியின் சகோதரியின் காணொளி நகைப்புக்குரியது

### பாதுகாப்பு அமைச்சின் ஊடகப்பேச்சாளர்



விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மனைவி மதிவதனி மற்றும் புதல்வி துவாரகா ஆகியோர் உயிருடன் உள்ளதாக வெளியிடப்பட்டுள்ள செய்தி நகைப்புக்குரியதென, பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கேர்ணல் நளின் 04

## இந்திய வைத்தியர்களின் வைத்தியசாலைகள் இலங்கையில்

### தொடர்ச்சியாக ஒத்துழைக்கவும் ஒப்புதல்



இலங்கையில் வைத்தியசாலைகளை ஆரம்பிக்க இந்திய வைத்தியர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக வர்த்தக இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் உறுதியளித்துள்ளார். இந்திய ஊடகங்கள் இச்செய்தியை வெளியிட்டுள்ளன.

ஆந்திர பிரதேசத்தின் விஜயவாடாவிலுள்ள வைத்திய நிறுவனமொன்றின் மருத்துவ 04

### சீன சினோபெக் நிறுவனம் ஊடாக

## குறைந்த விலையில் எரிபொருள் விற்பனை

### செப்டெம்பர் 20 முதல் ஆரம்பிக்க நடவடிக்கை

(லோரன்ஸ் செல்வநாயகம்)



சீன சினோபெக் நிறுவனம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் இலங்கைக்கு எரிபொருளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சர் 04

## இனவாத, மதவாத கருத்துக்களை தெரிவிப்பதை உடன் தவிர்க்கவும்

### தென்பகுதி இனவாதிகளுக்கு ராஜித தெரிவிப்பு



இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து வடக்கு, கிழக்கு தமிழர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாமென தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்வதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் கூறிய டாக்டர் ராஜித சேனாரத்ன: 04

## நாட்டில் நிலவும் கடும் வரட்சி நிலை 37,101 ஏக்கர் பயிர்ச்செய்கை பாதிப்பு

### விவசாய காப்புறுதி சபை அறிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக இதுவரை 37,101 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளதாகவும் அதனால் 32,967 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய மற்றும் 04

## கொழும்பு, கம்பஹாவுக்கு தடையின்றி நீர் கிடைக்கும்

### தேசிய நீர் வழங்கல் அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு, கம்பஹா பகுதிகளுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய முடியுமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

களனி ஆற்றின் நீர் மட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அம்பத்தளை பிரதேசத்தில் மணல் மேடு அமைக்கப்பட்டுள்ளதாக அதன் பிரதிப் பொது முகாமையாளர் அஜித் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

“இந் நாட்களில், நாட்டின் பல பகுதிகளிலிருந்து குடிநீர் பிரச்சினை எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 04

## வைத்தியர்கள் வெளிநாடு செல்ல சில கட்டுப்பாடுகளுடன் அனுமதி

### சுகாதார அமைச்சால் தீர்மானம் முன்னெடுப்பு

வைத்தியர்கள் தனிப்பட்ட தேவைகளுக்காக வெளிநாடு செல்வதற்கு சில கட்டுப்பாடுகளின் கீழ் அனுமதி வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, விடுமுறைக்கான காரணம், விடுமுறையில் செல்லும் காலப்பகுதி மற்றும் அவ்வாறு விடுமுறை பெற்ற வைத்தியருக்கான மாற்றீடு என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 04



03
**சிறுநீரக நோயாளர், முதியோருக்கான அரசின் விசேட கொடுப்பனவு விரைவில்**
அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

03
**ஜனாதிபதி சட்டத்தரணிகளை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்**

03
**வைத்தியர்களின் வெளியேற்றத்தை தடுக்காவிடின் பாரிய சிக்கல்**
சுகாதாரத்துறை குறித்து GMOA எச்சரிக்கை

## வீசா இன்றி குவைத்தில் தங்கியிருந்த 54 இலங்கையர் நாடு கடத்தல்

### 53 பெண்கள், 01 ஆண் நேற்று நாட்டை வந்தடைவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



விசாயின்றி நாட்டுக்கு திரும்ப முடியாமல் குவைத்தில் தங்கியிருந்த இலங்கைப் பணிப்பெண்கள் 54 பேர், நேற்று நாட்டை 04

## பாடசாலைக்குள் நுழைந்த காட்டுயானையால் பதற்றம்

### வவுனியாவில் நேற்றுக் காலை சம்பவம்



வவுனியா, வடக்கு மருதோடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வளாகத்துக்குள் நேற்று (16) காலை காட்டு யானையொன்று புகுந்ததால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. 04

## மொஸ்கோ- கொழும்புக்கு மேலதிக விமான சேவை

### ரஷ்ய Aeroflot நிறுவனம் திட்டம்



ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் அடுத்த மாதம் முதல் மொஸ்கோவுக்கும் கொழும்புக்குமிடையிலான விமான சேவைகளை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. வாரத்திற்கு 04

### அதிக ஞாபகத் திறன் கொண்ட

## உலக சாதனை படைத்த பொகவந்தலாவை சிறுமி



மனித உடலின் உள் உறுப்புகள் 423 இன் பெயர்களை 04 நிமிடங்களில் கூறி உலகின் அதிக ஞாபகத் திறன் கொண்ட மாணவி 08 வயது கனிஷிகா என்ற பொகவந்தலாவையைச் சேர்ந்த சிறுமி சோழன் உலக சாதனை படைத்துள்ளார்.

பொகவந்தலாவை 04

# நகர்வலம்







## தர்கா நகர் ஸாஹிராவில் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

தர்கா நகர் ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கல்லூரியின் நளீம் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இப் பொதுக்கூட்டத்தில் 2023ஆம் நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாகக்குழு தெரிவு மற்றும் பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் ஆகியன இடம்பெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களும் பாடசாலை எதிர்காலம் கருதி கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் ஜனாபா எம். என்.எப். நிஸ் ரீன் கேட்டுள்ளார்.

## ஹம்பாந்தோட்டையில் கடும் வரட்சி; குடிநீரின்றி 15,000 குடும்பங்கள் பாதிப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



பெலியத்தை, தங்காலை நகரங்கள் உட்பட சூழவுள்ள கிராமங்களிலும் 15,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாரிய குடிநீர் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த பிரதேசங்களுக்கு கிரம ஓயாவிலிருந்தே நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. வரட்சியான காலநிலையின் காரணமாக கிரம ஓயாவில் தற்போது போதியளவு நீர் இன்றி வற்றிப்போயுள்ளதினால் தங்காலை நலகம நீர் சுத்திகரிப்பு நிலையத்தை செயற்படுத்த முடியாதுள்ளது.

தங்காலை வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், பல்லிக்குடா, கதுருபொகுன, பலபொத, சீனிமோதர, மல்கம்புர, பெலியத்தை, பெலியத்தை நகரம், தம்முல்லை மற்றும் அகுல்மடுவ போன்ற பிரதேச மக்கள் பாரிய குடிநீர் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

## 13ஆம் திருத்தம் தொடர்பான தேசிய காங்கிரஸின் முன்மொழிவு

### ஜனாதிபதியிடம் கையளிப்பு



அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தம் தொடர்பான தேசிய காங்கிரஸின் முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையை அதன் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (15) மாலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இவ்வறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தம் தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்த வேண்டுகோளை ஏற்றே தேசிய காங்கிரஸ் தனது முன்மொழிவுகளை சமர்ப்பித்திருக்கிறது.

இம்முன்மொழிவுகள் பற்றி விரைவில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என்று கட்சியின் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் டாக்டர் ஏ. உதுமாலெப்பை, பொருளாளர் ஜே.எம். வஸீர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரசியலமைப்பின் 13 ஆம் திருத்த சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக பிரிந்திருக்க வேண்டும் எனவும் பொதுவாக மாகாண சபை முறைமை அவசியமற்றது எனவும் அது இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும் அதாஉல்லா கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மதவாச்சியில் சட்டவிரோத மருந்தகம் புலனாய்வு பிரிவினால் சுற்றிவளைப்பு

### உரிமையாளர் கைது; மருந்தகம் சீல் வைப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பதிவுசெய்யப்பட்ட உரிமம் இல்லாமல் மருந்துகளை விற்பனை செய்தல் மற்றும் சேமிப்பு செய்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மதவாச்சி பகுதியில் தனியார் மருந்தகம் ஒன்றிற்கு தற்காலிகமாக சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் உரிமையாளரை கைது செய்துள்ளதாக மதவாச்சி சுகாதார வைத்திய அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மதவாச்சி நீதவான் நீதிமன்றில் (14) ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு நீண்டகாலமாக வலி மாத்திரைகளை விநியோகம் செய்வதாக கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய குறித்த மருந்தகம் புலனாய்வு பிரிவினரால் சுற்றிவளைக்கப்பட்டது. உரிய நிபந்தனைகளை மீறி மருந்துகளின் செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் மருந்தை விநியோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.







பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி பாக்கீர் மாக்கார் மாநாட்டு மண்டபத்திற்கு ரூ. 10 இலட்சம் பெறுமதியான கதிரை தொகுதிகளை பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தனது பன்முக வரவு செலவு திட்ட நிதியிலிருந்து வழங்கியுள்ளார். இதனை வைபவரீதியாக கையளிக்கும் நிகழ்வு நேற்று (16) பாடசாலை அதிபர் பஹீமா பாயிஸ் தலைமையில் பாடசாலையில் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பாடசாலை அதிபரிடம் முதல் கதிரையை வைபவரீதியாக கையளிப்பதையும் பாடசாலைக்கு உதவியமைக்கு பாராளுமன்ற உறுப்பினருக்கு அதிபர் நினைவுச் சின்னம் வழங்குவதையும் கலந்த கொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: அஜ்வாத் பாஸி)

**காணி எடுத்தற் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

காலி மாவட்டத்தின், கோணபீனுவல பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் கல்லல கமாச்சகெய் லக்ஷ்மி காந்தி ஆகிய என்னால் காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 33ஆம் பிரிவின் கீழ் பின்வரும் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விபரிக்கப்படுகின்ற காணியினை எடுத்துக் கொள்வதற்காக உரிய நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக நட்டஈட்டுத் தொகையான ரூபா. ஆயிரம் (ரூபா 1000/=)தொகையினை உரிமை யாளர்களுக்கு வழங்குவதற்காக காலி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் LA/787 இன் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன், மேலதிக விபரங்களுக்காக இலக்கம் 2336/86. மற்றும் 2023 ஆனி 17 திகதியிட்டது திகதிய அரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையினைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

01. பிரதேச செயலாளர்- கோணபீனுவல
02. அடிப்படை நிலத்துண்டு இலக்கம் - 3876
03. நிலத்துண்டு இலக்கம் - 96
04. நிலத்துண்டுகளின் எண்ணிக்கை - 01
05. மொத்தக் காணியின் அளவு - 0.0002 (ஹெக்ரயார்)
06. காணி அமைந்துள்ள கிராமம்/கிராமங்கள் பத்தன ஆரச்சிகந்த கிராமம் /(59A/1 ஆரச்சிகந்த கிராம சேவகப் பிரிவு)

**அமைவு**

வடக்கே - நிலத்துண்டு இலக்கம் 93

கிழக்கே - நிலத்துண்டு இலக்கம் 93 மற்றும் உரிமையாளர்களின் பெயர்களைத் தேடிக் கொள்ள முடியாத அத்தரவத்தை,

தெற்கே - உரிமையாளர்களின் பெயர்களைத் தேடிக் கொள்ள முடியாத அத்தரவத்த,

மேற்கே - நிலத்துண்டு இலக்கம் 95 மற்றும் நிலத்துண்டு இலக்கம் 93 போன்ற எல்லைகளை உள்ளடக்கி,

அமையப் பெற்றுள்ள ஆன, நில அளவில், ஏக்கர்:- .......ரூட்:-, பர்சஸ்:-0.08 (ஹெக்:-0.0002) ஆன நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆ.வ.கா.3876 மற்றும் 2011/04/28 ஆம் திகதிய அடிப்படை நிலத்துண்டு இலக்கம்:-96 ஆன, காணியின் பெயர்:- அத்தரவத்த எனப்படுகின்ற பத்தன ஆரச்சிகந்த கிராமத்தில், (59 A/1 ஆரச்சிகந்த கிராம சேவகப் பிரிவு) அமையப் பெற்றுள்ள குடியரசிற்குச் சொந்தமான காணியின் தொகுதி

**ஜீ.ஜீ.லக்ஷ்மி காந்தி**
**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலாளர் அலுவலகம்**
**கோணபீனுவல.**

**கோணபீனுவல பிரதேச செயலாளர் பிரிவு**
**திகதி :- 2023.08.09 ஆம் திகதி,**
**கோணபீனுவல பிரதேச செயலாளர்**
**அலுவலகத்தில் இருந்து,**

## அறபா 91 நலன்புரிச் சங்க ஏற்பாட்டில் வெலிகமவில் கல்விக் கருத்தரங்கு







வெலிகம அறபா தேசிய பாடசாலை பழைய மாணவர் குழுக்களின் ஒன்றான 'அறபா 91' நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்த கல்விக் கருத்தரங்கு அண்மையில் பாடசாலை வபா மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் எம்.ரீ.எம். முதஷ்ஹரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அறபா பழைய மாணவர்களான வைத்தியர் எம்.எப். எம். இம்தியாஸ் மற்றும் வைத்தியர் எம்.இஸட்.எம். திஹான் ஆகியோர் வளவாளர்களாக பங்கேற்று விரிவுரையாற்றினர்.

அறபா தேசிய பாடசாலை 10,11,12 ஆம் தரம் மாணவர்களுக்காக நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கில் அறபா 91 பழைய மாணவர் சங்கத்தின் இணைச் செயலாளர் ஊடகவியலாளர் எம்.எஸ்.பாஹிம் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கம்பியூட்டர் விசன் சிண்ட்ரோம் என்ற தலைப்பில் வைத்தியர் எம்.எப்.எம். இம்தியாஸின் உரை இடம் பெற்றதோடு நினைவாற்றலுக்கான கருவிகளும் நுட்பங்களும் என்ற தலைப்பில் வைத்தியர் எம். இஸட். எம்.திஹான் உரையாற்றினார்.

இதன் போது கருத்தரங்குடன் தொடர்புடையதாக மாணவர்களிடம் வினாக்கள் கேட்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நன்றியுரையை அமைப்பின் தலைவர் எம்.இஸட்.எம். அர்பத் நிகழ்த்தினார்.

அறபா 91 நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலுடன் இணைந்ததாக இந்த கருத்தரங்கு முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரின் தனித்துவ கலை வடிவங்களை வெளிப்படுத்தும் விழா

### சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் என நம்பிக்கை

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பி வரும் நிலையில் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை தருவதாக தெரிவித்திருக்கும் காஷ்மீர் சுற்றுலாத்துறை, கடந்த வாரம் இரண்டு நாள் கலாசார விழாவை நடத்தியிருந்தது.

குல்காம் மாவட்டத்தில் உள்ள இந்திராகாந்தி கலை நிலைய மண்டபத்தில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முன்னர் இப்பகுதி தீவிரவாதிகளின் நடமாட்டம் கொண்டதாக காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. காஷ்மீரி இலக்கியத்தில் ஆன்மிகம், திறன் தேடல், காஷ்மீரின் இளம்பெண் எழுத்தாளர் சங்கமம், காஷ்மீர் கிராமிய இலக்கியம் உட்பட பல கலை, இலக்கிய பிரிவுகளில் இங்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஆன்மிகப் பிரிவில் பௌத்த, சைவ, சூபிஸம், பொதுப்படையான ஆன்மிகம் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன.

கடந்த காலத்தில் காஷ்மீர் பிராந்தியத்தில் அமைதியற்ற சூழல் நிலவியதன் கலை இலக்கிய முயற்சிகள் முடங்கிப் போயிருந்ததாகவும், காஷ்மீர் சுற்றுலா என்பது இயற்கை அழகை ரசித்து அனுபவிப்பது மட்டுமல்ல அதன் தனித்துவமான கலை இலக்கிய வடிவங்களையும் உணர்ந்து ரசிப்பதுமாகும் என்ற வகையில் இந்த கலைவிழா முக்கியமானது என்று காஷ்மீர் கலை, கலாசார அகடமியின் அதிகாரியான பாரத்சிங்க மனாஸ் கூறியதாக டெக்கான் ஹெரால்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஆழமாக நிறுவப்பட்ட கலை – கலாசார பாரம்பரியம் காஷ்மீருக்கு உண்டு என்றும் அதன் இலக்கிய வடிவங்கள் சமஸ்கிருதம், காஷ்மீரி, பாரசிக, உருது, இந்தி மொழிகளில் காணப்படுவதோடு தற்போது ஆங்கிலத்திலும் எழுதப்படுவதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### இந்தியாவின் நேபாளத்துக்கான கடன் உதவித்திட்டம் மீளாய்வு

## பாதை, மின்சார, வீடமைப்பு திட்டங்கள் செயற்பாட்டில் இந்திய – நேபாள இணை அமைச்சர்கள் சந்திப்பு

இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான கடன் வழங்கும் உடன்படிக்கையின் பத்தாவது சுற்று மீளாய்வு கூட்டம் கடந்த 10ஆம் திகதி நேபாள தலைநகரமான காத்மண்டுவில் நடைபெற்றது.

இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளர் அஜேகுமார், காத்மண்டு இந்தியத் தூதரக உயர் அதிகாரிகள், இந்திய ஏற்றுமதி வங்கி அதிகாரிகளுடன் இம் மீளாய்வு கூட்டத்தில் கலந்துகொள்ள, நேபாள நிதியமைச்சின் இணைச் செயலாளர் ஸ்ரீ கிருஷ்ணா நேபால் தமது அதிகாரிகளுடன் கலந்து கொண்டார்.

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் பாதை அமைப்பு, நீர் மின்சாரத் திட்டங்கள், வீடமைப்புத் திட்டங்கள் நேபாளத்தில் நிறைவேற்றப்படுகின்றன. தற்போது நான்குக்கும் மேற்பட்ட நீர்மின்சாரத் திட்டங்கள் அமைக்கப்பட்டு வருவதோடு 452 மெகா வொட்ஸ் மின்சாரம் இந்தியாவுக்கு ஏற்றுமதியாகி வருகிறது. இதுவரை 40 பாதை அமைப்புத் திட்டங்கள் இக்கடன் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்திருக்கிறது.

இந்திய அதிகாரிகள் இம் மீளாய்வு கூட்டத்துக்கு முன்பதாக பாதை அமைப்பு திட்டங்களை நேரடியாக பார்வையிட்டனர்.

இந்திய கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 60 நாடுகள் பயன்பெற்று வருவதாகவும் 30 பில்லியன் டொலர்கள் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தகவல் தெரிவித்திருக்கும் இந்தியத் தூதரகம், 100 மில்லியன், 250 மில்லியன், 550 மில்லியன் மற்றும் 750 மில்லியன் டொலர்கள் என நான்கு பிரிவுகளில் கடன் வழங்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

# சிறுநீரக நோயாளர், முதியோருக்கான அரசின் விசேட கொடுப்பனவு விரைவில்

## அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்)**



சிறுநீரக நோயாளர், விசேட தேவையுடையோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் முதியோருக்கான கொடுப்பனவுகளை, முன்பு போன்று வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சரின் உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் அவர் இதனை பதிவிட்டுள்ளார்.பதிவில், 6,47,683 பேருக்கு முன்புபோன்று கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அடுத்த சில நாட்களில் பணம் செலுத்தப்படும்.

இதன்படி, காத்திருப்போர் பட்டியல் உட்பட 5,17,962 பேருக்கு முதியோர் உதவித் தொகையும், 88,602 பேருக்கு விசேட தேவையுடையோருக்கான உதவித் தொகையும், 41,119 பேருக்கு சிறுநீரக நோயாளர் உதவித்தொகையும் வழங்கப்படும்.

முதியோர் கொடுப்பனவு, தபால் அலுவலகங்களூடாகவும் விசேட தேவையுடையோர் மற்றும் சிறுநீரக கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்களூடாகவும் வழங்கப்பட வாய்ப்புள்ளது.

## ஜனாதிபதி சட்டத்தரணிகளை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்

2022/2023 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சட்டத்தரணிகளைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அரசியலமைப்பின் 33 (ஈ) சரத்துக்கமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால், இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2021 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி 2255/24 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

01.இலங்கை உயர் நீதிமன்றத்தின் சிரேஷ்ட சட்டத்தரணியாக இருத்தல்.

02. சட்டத்துறையில் சிறந்த வரவேற்பு மற்றும் தொழில்துறை திறன்களை வெளிக்காட்டியிருத்தல்.

03. இலங்கை சட்டத்தின் முன்னேற்றத்துக்கும் சட்டத்துறையில் நிபுணராகவும் மற்றும் தனித்துவமான சிறந்த பங்களிப்பை வழங்கியிருத்தல்.

04

## அதிகரிப்பதா? இடைநிறுத்துவதா? QR முறை குறித்து இறுதி தீர்மானம் அடுத்த வாரம்



தேசிய எரிபொருள் அனுமதி அல்லது QR முறையை இடைநிறுத்துவது குறித்து அடுத்தமாதம் பரிசீலிக்கப்படுமென மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார். QR முறையை இடைநிறுத்துவது அல்லது வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## வைத்தியர்களின் வெளியேற்றத்தை தடுக்காவிடின் பாரிய சிக்கல்

### சுகாதாரத்துறை குறித்து GMOA எச்சரிக்கை

GMOA

வைத்தியர்கள் நாட்டை விட்டு செல்வதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் சுகாதாரத்துறை பாரிய நெருக்கடியை எதிர்நோக்குவதுடன், விசேட வைத்திய நிபுணர்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டுவர வேண்டிய நிலை ஏற்படுமெனவும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் விசேட வைத்திய நிபுணர் அசோக்க குணரத்ன தெரிவித்தார்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதிகமான வைத்தியர்கள் நாட்டை விட்டுசெல்வது, அவர்களுக்காக உத்தியோக பூர்வ வாசஸ்தலம் அல்லது வேறு காரணங்களுக்காக அல்ல. மாறாக நாட்டிலிருக்கும் அதிகரித்துள்ள வரி மற்றும் நாட்டின் ஸ்திரத்தன்மை போன்ற விடயங்களுக்கே இவ்வாறு வெளியில் செல்கின்றனர். இவ்வாறு வைத்தியர்கள் நாட்டை விட்டு செல்வது, சுகாதாரத்துறையில் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும்.

வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இரண்டு வைத்தியர்கள் இருந்த இடங்களில், ஒரு வைத்தியரே இருக்கின்றார். 03 பேர் இருந்த இடங்களில் 02 பேரே உள்ளனனர். இந்நிலை தொடருமானால், சுகாதாரத்துறையை சுருக்கி விடுவதைத் தவிர வேறு வழியேற்படாது . இப்பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. இது தொடர்பாக 10 மாதங்களுக்கு முன்னரே நாங்கள் தெரிவித்து வருகிறோம். ஆனால் சுகாதார அமைச்சு அது தொடர்பில் கண்டு கொள்ளாமல் இருந்து வந்தது.

விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதன் காரணத்தை மறைக்கும் வகையில்,சுகாதார அமைச்சு செயற்பட்டு வருகிறது . விசேட வைத்திய நிபுணர் ஒருவரை பயிற்றுவிக்க சுமார் 10, 12 மில்லியன் ரூபா செலவிடுவதாக சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

அவர் தெரிவிக்கும் இந்த தொகை, வைத்தியருக்கு வழங்கும் சம்பளத்துடனாக இருக்கலாம். ஏனெனில் விசேட வைத்தியர் ஒருவர் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் 03 வருடங்கள் வைத்தியசாலையில் இரவு பகலாக சேவை செய்ய வேண்டும். அவ்வாறு சேவை செய்தே இந்த சம்பளத்தை அவர்கள் பெறுகின்றனர்.

எனவே,வைத்திய ர்களை ஊக்குவிக்கும் வகையிலேயே சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.


நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

**பெறுகை அறிவித்தல்**

**இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு குடிநீரினை பெற்றுக்கொள்ளல் 2023/2024.**

இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு குடிநீரினை பெற்றுக்கொள்வதற்கான 2023/2024 ம் ஆண்டிற்கான விலைமனுக்கள், நாடு பூராகவும் உள்ள தகுதியான நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. இப்பெறுகை அறிவித்தலுடன் தொடர்புடைய மனு ஆவணங்கள் இலங்கை மதுவரி திணைக்களத்தின் தலைமை அலுவகத்தின் நான்காம் மாடியில் உள்ள வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளமுடியும். மேற்படி ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000.00 இனை திணைக்கள காசாளரிடம் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை வழங்கல் பிரிவில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்.
2. மனு ஆவணங்கள் 05.09.2023 ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை வழங்கப்படும்.
3. மீளளிக்கப்படக்கூடிய மனு பாதுகாப்பு கட்டணமாக ரூபா 25,000.00 இனை திணைக்கள காசாளரிடம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி அல்லது மத்தியவங்கியில் பதிவுசெய்யப்பட்ட வணிக வங்கியொன்றிலிருந்து மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதத்தின் மூலப்பிரதி, மனு ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 2023.09.08 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை ஆகும்.

திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம்,
இலங்கை மதுவரித் திணைக்களம்,
இல : 353, கோட்டே வீதி,
இராஜகிரிய.


National Lotteries Board / தேசிய லொத்தர் சபை — செவ்வாய்க்கிழமை 2023.08.15 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5207 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,204,840.00 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 9 6 5 7 8 5

15.08.2023 — 0033 — 3 1 — 3 8 6 6 6 9 — ரூ 10,957,841.12

ராசி சப மலன் — 2023-08-15 — 516 — ரூ.2,549,035.20 — 11 17 24 30

Mega Power — 1555 — 15/08/2023 — 67519 — ரூ.404,267,932.00 — E — 08 — 35 72 75 76 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

தன நிதானய — 1237 — ரூ. 105,209,838.40 — Q — 06 15 39 47 — Q — 08536

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3449 — சீட்டிழுப்பு திகதி 2023.08.15 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 72,776,924.00 — ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 21 23 54 60 — விசேட எழுத்து O — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 68875


**இலங்கை துறைமுக அதிகார சபை**

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/PT/6445(EL) | Spare Hoist Motor for 50T ZPMC STS Cranes at JCT | 250,000.00 | 3,500.00 | 14-09-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6449(MP) | Spares for Kato KA – 900 Mobile Crane | 75,000.00 | 1,000.00 | 14-09-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6495(EL) | 786M of 19C X 3.5 SQMM Festoon Cable for STS Cranes at JCT | 75,000.00 | 1,000.00 | 14-09-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6451(MP) | Spares for Nigata Engine Coupled to Nishishiba Generator | 1,800,000.00 | 20,000.00 | 14-09-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6487(EL) | Spare Gantry Motor for Mitsui Transfer Cranes | 250,000.00 | 3,500.00 | 19-09-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6490(MP) | 28 Nos. Trolley Rail for ZPMC 41T STS Cranes at JCT | 160,000.00 | 3,500.00 | 19-09-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6488(EL) | Spare Power & Control Cables for ECT RTG Cranes | 70,000.00 | 1,000.00 | 19-09-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/23/PT/02/001 | 50 Cum Ready Mix Concrete ( Grade 30 ) | 20,000.00 | 1,000.00 | 07-09-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/16/024 | 10 Nos. Hook Chain Set Slings 20 Ton , 30 Feet | 35,000.00 | 1,000.00 | 07-09-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/17/010 | 05 Nos. Automatic Identification System ( AIS ) | 40,000.00 | 1,000.00 | 07-09-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/07/058 | 200 Nos. PVC Cable Single Core 7/0.67 MM ( 7/029" ) ( 100M ROL ) | 18,500.00 | 1,000.00 | 08-09-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/12/056 | Spares for Kato KA 900 : CR28 Mobile Crane | 35,000.00 | 1,000.00 | 08-09-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/16/061 | License Renewal of Web Application Firewall ( WAF ) for SLPA | 30,000.00 | 1,000.00 | 08-09-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/14/060 | Marine Paints for Container Cranes | 25,000.00 | 1,000.00 | 11-09-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/01/059 | 4620 Ltrs Transfluid Oil P - 157 | 96,500.00 | 1,000.00 | 11-09-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/16/060 | 54000 Nos. Bar Soap ( Local ) 650 GRAMS | 254,000.00 | 3,500.00 | 11-09-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஆகஸ்ட் 18ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்கள்: 2381652, 2470443**

## பெருந்தோட்டத் துறையை...

வங்குரோத்து நிலையி லிருந்து காப்பாற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். ஆனால், நமது நாட்டின் பொருளாதாரத்தில் வர்த்தக பற்றாக்குறை ஏற்பட்டால், இந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை பத்து ஆண்டுகளுக்கு மேல் முன்னெடுக்க முடியாது. எமக்கு வெளிநாட்டுக் கடன் பெற நேரிடும். பட்ஜெட் பற்றாக்குறை ஏற்படுவதால் அதிக பணம் அச்சிட வேண்டும். மீண்டும் இந்த பழைய முறைக்கு செல்வதா அல்லது முறையான பொருளாதார முறை மூலம் எழுந்து நிற்பதா என்பதை முடிவு செய்ய வேண்டும். மேலும் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும். யுத்த காலத்திலும் எமது நாட்டின் பொருளாதாரம் வலுவாகவே இருந்தது. யுத்த காலத்திலும் நாம் ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்ததை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும், உரிமை மற்றும் ஒழுங்குமுறை ஆகிய இரண்டிலும் அரசாங்கத்தின் ஆதிக்கம் செலுத்தக் கூடிய பொருளாதாரத்தை பராமரிப்பது இன்று கடினமாக உள்ளது. கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் தனியார் மயமாக்கல் ஆகியவை இப்போது நமக்கு இருக்கும் மாற்று வழிகளாகும். தேயிலை உற்பத்தி என்பது அரசாங்க ஆதரவுடன் கட்டமைக்கப்பட்ட தொழில் அல்ல. தனியார் மூலதனத்தைப் பயன்படுத்தி வெற்றி பெற்றவர்களின் தொழில் இது. இதில் சிலர் தோல்வியடைந்தனர். ஆனால் பலர் வெற்றி பெற்றனர். சிலர் விவசாயம் செய்து கொண்டிருந்த காணிகள் கூட சர்ச்சைக்குரிய வகையில் மீண்டும் கைப்பற்றப்பட்டன.

நாம் தற்போது எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தில் பரந்த பங்கை வகிக்கும் பலம் தேயிலைத் தொழிலுக்கு இன்னுமுள்ளது. அடுத்த 2030 வருடங்களில் கவனம் செலுத்தி இந்தத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை கண்டறிய வேண்டும்.

உலகளாவிய காலநிலை மாற்றத்தால், எதிர்காலத்தில் நாம் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தேயிலை தொழிலைக் காப்பாற்ற, இந்த மிதமான காலநிலை வலயத்தை, காலநிலை மாற்றத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். சர்வதேச மாநாடுகளில் இது தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளோம். இந்நிலை உலகின் வடக்கு அரைக்கோளத்தில் ஏற்பட்ட பாரிய தொழில்மயமாதலின் பாதகமான விளைவு என்றும் இதனை குறிப்பிடலாம். காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப நாம் மாற வேண்டும். மேலும் நீர் தொடர்பான நிலைமை மிகவும் ஆபத்தானது என்றுதான் சொல்ல வேண்டும். காலநிலை மாற்றத்தால் இலங்கையில் பயன்படுத்தக்கூடிய நீர் மூலங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய தகவல்களை அண்மையில் படித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. பெரும்பாலான நீர் மூலங்கள் மத்திய மலைநாட்டில் இருப்பதால், அது நேரடியாக தேயிலை தொழிலை பாதிக்கிறது. இன்னும் 50 முதல் 60 வருடங்களில் நமது சந்தை எங்கே இருக்கும் என்று பார்க்க வேண்டும்.

2050 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகை வளர்ச்சியின் கணிப்புகளைப் பார்க்கும்போது, இந்தியாவின் மக்கள்தொகை மேலும் 400 மில்லியன்களால் அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது. கென்யா, மலாவி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் மக்கள் தொகையும் அதிகரித்து வருகிறது. அதனுடன் இணைந்ததாக அந்த நாடுகளின் தனிநபர் வருமானமும் அதிகரிக்கிறது.

ஆனால் இலங்கையின் சனத்தொகை அதிகரிக்கவில்லை. எனவே, எங்கள் உற்பத்திகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். சீனா திட்டமிட்டு மக்கள் தொகையை கட்டுப்படுத்தி வருகிறது. எதிர்காலத்தில், சீனாவிலிருந்து அதிகமான தேயிலை சந்தைக்கு வரும். இது உங்களுக்கு நல்ல வாய்ப்புகளை உருவாக்கும். மேலும் இந்தியாவும் தேயிலை சந்தைக்கு வருகிறது. எனவே இந்தியா மற்றும் சீனாவுடன் இது குறித்து கலந்துரையாட வேண்டும். எங்களுக்கு தனியாக பயணிக்க முடியாது. அவர்களின் சந்தைப் போக்கை நீங்கள் கவனமாக நோக்க வேண்டும். உலகின் கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகள் தேயிலையை கொள்வனவு செய்து அதை பால் அல்லது பிஸ்கட்டுடன் சேர்த்துத் தயார் செய்து குடிக்கிறார்கள். இன்று, கிரீன் டீ உலகில் பிரபலமான பானமாக மாறிவிட்டது. தேயிலை தொடர்பான புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உற்பத்திகள் பற்றி சிந்திக்க வேண்டும்.

நான் சிறுவயதில் எங்கள் வீட்டில் மிகப் பெரிய சமையலறை இருந்தது. ஆனால் இப்போது வீடுகளில் மிகச் சிறிய சமையலறை தான் உள்ளது. அடுத்த 20 முதல் 30 ஆண்டுகளில் சமையலறை இல்லாமல் வீடுகள் கட்டப்படும். அவற்றில் ஓரிரண்டு உணவு பதப்படுத்தும் இயந்திரங்கள் இருக்கும். எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் இவை என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். அந்தச் சவால்களை நாம் உணர்ந்து அதற்கு ஏற்றவாறு மாற்றுவழிகளுடன் முன்னேற வேண்டும். சுவீடன் நாட்டுப் பொருளாதார நிபுணரான குன்னர் மிர்டலினால் 1960களில் எழுதப்பட்ட Asian Drama என்ற புத்தகத்தில் இலங்கையைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டிருந்தது. "ஆங்கிலேயர்கள் தொழில் புரட்சியில் இருந்து நிர்வாகம் மற்றும் நிதி பற்றிய அனுபவத்தைப் பெற்று இந்தியாவிற்கும் இலங்கைக்கும் அதனைக் கொண்டு வந்து பின்னர் அவற்றை பெருந்தோட்டத் துறையில் அறிமுகப்படுத்தினர். எனவே, எமக்கு நவீன தோட்ட முகாமைத்துவ முறைமை கிடைத்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுடன் ஒப்பிடுகையில் புதிய முகாமைத்துவ நடைமுறைகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் இது. இது அனைத்து நவீன டிஜிட்டல் நுட்பங்களையும் உள்ளடக்கிய ஒரு தலைசிறந்த படைப்பாக இருக்க வேண்டும்.

அதில் செயற்கை நுண்ணறிவு, உயிரியல் தொழில்நுட்பம் போன்ற துறைகளையும் பயன்படுத்த முடியுமா என்பது குறித்து ஆராய வேண்டும். இது தனியார் துறையினரால் உருவாக்கப்பட வேண்டும். லிப்டன் இலங்கைக்கு வரவில்லையென்றால் இன்று இவை எதுவும் இருந்திருக்காது. எனவே, அந்த முறைமையை மேம்படுத்துவதன் மூலம் புதிய தயாரிப்புகளை சந்தைக்குக் கொண்டுவருவதற்கான வழிகளை அவசரமாக அடையாளங் காண வேண்டும். அதற்கு உங்களுக்கு முழு ஆதரவை வழங்குவோம். தேயிலை தொழில்துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு அதுதான் எம்மால் செய்ய முடியும். அதனுடன் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கவும் செயற்பட்டு வருகின்றோம்.

சர்வதேச ரீதியில் இலங்கை தேயிலையை தூய (pure) தேயிலையாக கொண்டு செல்லும் இலக்கை அடைய சிறந்த தீர்வுகளுடன் தொடர்ந்து செல்வதற்கு உங்களை அழைக்கிறேன் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரன, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் ஜனக தர்மகீர்த்தி, இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் துறைமுக நகரம் என்பவற்றின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான தினேஷ் வீரக்கொடி, கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் சஞ்சய் ஹேரத், உப தலைவர் லுஷாந்த டி சில்வா, முன்னாள் தலைவர்களான ஜனக கருணாரத்ன, அன்ஸ்லம் பெர்னாண்டோ ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதி... (03 ஆம் பக்கத் தொடர்)

04. இலங்கைக்குள் அல்லது வெளிநாட்டில் சட்டம் தொடர்பான சிறப்புத் திறனை வெளிப்படுத்தியிருத்தல்.

05. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை மீறாமல் நற்பண்பும் நற்பெயரும் கொண்டவராக இருத்தல்.

06. சட்டத்தின் ஆட்சி அல்லது நீதித் துறையின் சுதந்திரத்தைப் பாதிக்கும் அல்லது மட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு செயலிலும் ஈடுபடாமல் இருத்தல்.

07. உயர் நீதிமன்றத்தினாலோ அல்லது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினாலோ ஒழுக்காற்று உத்தரவுக்கு உட்படுத்தப்படாத நபராக இருப்பதுடன், நீதிமன்றத்தினால் தொழில்சார் முறைகேடுகள் அல்லது தவறான நடத்தைகளுக்காக தண்டிக்கப்படாதவராக இருத்தல்.

08. குறைந்தபட்சம் ஐந்து வருட காலத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான வரி செலுத்துபவராக பதிவு செய்திருத்தல்.

சட்டம் மற்றும் சட்ட அமைப்புகள் பற்றிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை வெளியிட்டிருத்தல், தேசிய அல்லது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் சட்டம் படித்திருத்தல், அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் சட்டம் கற்பித்தல் என்பன ஜனாதிபதி சட்டத்தரணிகளைத் தெரிவு செய்வதற்கான மேலதிக தகைமைகளாக காணப்படும்.

விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் (20) வருடங்கள் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக செயற்பட்டிருத்தல், (விசேட தேவைகளின் போது பதினைந்து (15) வருட சேவை உட்பட ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள், ஜனாதிபதி சட்டத்தரணிகளாக தெரிவு செய்யப்படுவர்). விண்ணப்பதாரர் பதிவாளராக (நொத்தாரிசு) இருப்பது தகைமையாக கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரரால் மூன்றாம் தரப்பின் ஊடாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சமர்பிக்கப்படும் விண்ணப்பம் ஜனாதிபதி சட்டத்தரணியாக தெரிவு செய்யப்படுவதற்கான தகைமையாக கருதப்படாது. பூர்த்தி செய்யப்பட்ட எழுத்துமூல விண்ணப்பப் படிவங்களை, உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பிரதிகளுடன் 2023 ஓகஸ்ட் 25 அல்லது அதற்கு முன்னதாக "ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்ப உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல் 2022 / 2023" என தெளிவாக குறிப்பிட வேண்டும்.

விண்ணப்படிவங்களைத் தரவிறக்கம் செய்துகொள்ள www.presidentsoffice.gov.lk இணையத் தளத்தில் அறிந்து கொள்ள முடியும்.

## குறைந்த விலையில்...

கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். இந்நடவடிக்கைகள் செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதியளவில் ஆரம்பமாகுமென எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## நாட்டில் நிலவும் கடும் வரட்சி...

கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது. மேற்படி காப்புறுதி நிறுவனம் நேற்றைய தினம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு வழங்கியுள்ள நெற்பயிர்ச் செய்கை பாதிப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையிலேயே, இது குறிப்பிடப்பட்டுள்ளது.

## வீசா இன்றி குவைத்தில் தங்கியிருந்த...

வந்தடைந்தனர். குவைத்திலுள்ள இலங்கை தூதுவராலயத்தின் செயற்பாட்டையடுத்து இவர்கள் 54 பேரும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை இவர்கள் வந்தடைந்ததாக விமான நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவர்களில் 53 பணிப்பெண்களும் 01 ஆணும் உள்ளடங்கு கின்றனர். இவர்கள், அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களென்றும் அவர் தெரிவித்தார். தாம், ஒப்பந்தம் செய்த வீடுகளிலிருந்து வெளியேறிய இவர்கள், நீண்டகாலம் குவைத்திலுள்ள வேறு இடங்களில் அதிக சம்பளத்திற்கு வேலை செய்துள்ளனர். இந்நிலையில்,நோயுற்றவர்கள் உட்பட சகலரையும் இலங்கைக்கு அனுப்புவதற்கு குவைத்திலுள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குவைத்தின் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம், பொலிஸார், நீதிமன்றம் ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கு தற்காலிக விமான டிக்கட்டுகள் தயாரிக்கப்பட்டே,இவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## சீனா உலகுக்கு உண்மையான...

தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். சீனாவின் குன்மிங்கில் நேற்று (16) ஆரம்பமான சீன வர்த்தக அமைச்சும் யுனான் மாநில அரசும் இணைந்து ஏற்பாடு செய்த 07ஆவது சீனதெற்காசிய கண்காட்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே, பிரதமர் இதனைத் தெரிவித்தார். இந்த மாபெரும் வர்த்தக கண்காட்சியில் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் பிராந்திய விரிவான பொருளாதார ஒத்துழைப்பு (RECP) உறுப்பு நாடுகள் உட்பட 60 நாடுகள் பங்கேற்கின்றன.

## மதிவதனியின் சகோதரியின்...

ஹேரத் தெரிவித்துள்ளார். மதிவதனி மற்றும் மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருப்பதாகவும், மிக அண்மையில் இருவரையும் சந்தித்ததாகவும், அவர்களுடன் உணவு உண்டதாகவும் டென்மார்க்கில் வசிக்கும் மதிவதனியின் சகோதரி காணொளி ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நளின் ஹேரத், தனது கவனத்தை ஈர்த்துக்கொள்ளும் வகையில் இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாகவும், இதுவொரு போலியான நாடகம் எனவும் தெரிவித்துள்ளார். இவர்கள் இருவரையும், தான் நேரடியாக சந்தித்தாக மதிவதனியின் சகோதரி கூறிய கருத்து தமிழ் சமூக வலையத்தள பரப்பில் எதிர்வினைகளையும் பரபரப்பையும் தொடர்ந்தும் உருவாக்கி வருகிறது. டென்மார்க்கில் வசிக்கும் இவர், ஒரு காணொளிப் பதிவினூடாக இந்தக் கருத்தை வெளிப்படுத்தியதால், இந்தக் காணொளியை மையப்படுத்திய கலவையான எதிர்வினைகள் வெளிப்பட்டுள்ளன. தனது சகோதரி மதிவதனி மற்றும் பெறாமகள் துவாரகா ஆகியோரை, தான் நேரடியாக சந்தித்தாக இவர் கூறியிருந்தாலும், இந்தச் சந்திப்பு எங்கு இடம் பெற்றது என்ற விடயத்தை இந்தக் காணொளியில் அவர் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய வைத்தியர்களின்...

திட்டமொன்றை ஆரம்பித்து வைத்ததன் பின்னரே, அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலத்தில் கிடைக்கும் சிறப்பான மருத்துவ வசதிகளைப் போன்று, இலங்கையிலும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளதாக அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதற்காக கொழும்பு தவிர்ந்த ஏனைய நகரங்களிலும் வைத்திய சாலைகளை உருவாக்குவதற்கான அனுமதி வழங்கப் படவுள்ளது.

## இனவாத, மதவாத கருத்துக்களை...

கொடூர போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழர்கள் நிம்மதியான வாழ்வையே விரும்புகின்றனர். அவர்கள் சம உரிமைகளைத்தான் கேட்கிறார்கள். இன்னொரு போரை அவர்கள் விரும்பவில்லை. இந்நிலையில், இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து அவர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டமென்று தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்கிறேன்.

## வைத்தியர்கள் வெளிநாடு செல்ல...

சில துறைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை மற்றும் வெளிநாடுகளுக்கு சென்ற வைத்தியர்கள் மீள நாடு திரும்பாமை உள்ளிட்ட காரணங்களினால் வைத்தியசாலைகள் சிலவற்றின் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்திலேயே சுகாதார அமைச்சு புதிய கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது.

## பாடசாலைக்குள் நுழைந்த...

இதனையடுத்து கிராம மக்கள் ஒன்றிணைந்து காட்டு யானையைக் காட்டுக்குள் விரட்டினர். எனினும், அந்த யானை அக்கிராமத்தை அண்டிய பகுதியிலேயே தொடர்ந்து சுற்றிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மொஸ்கோ கொழும்புக்கு...

மூன்று முறை ஏரோஃப்ளோட் நிறுவனமானது, கொழும்புக்கான விமான சேவையை மேற்கொண்டு வருகின்றது. 'மேலதிக விமான சேவையாக செப்டம்பர் 09 ஆம் திகதி முதல் மொஸ்கோவிலிருந்து சனிக்கிழமைகளிலும், கொழும்பிலிருந்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் புதிய சேவைகள் தொடங்குகின்றன. இதன்படி எஸ்.யூ.288 என்ற விமானம் மொஸ்கோவிலிருந்து 22:50 மணிக்குப் புறப்பட்டு, மறுநாள் 10:20 மணிக்கு கொழும்பு வந்தடையுமென ஏரோஃப்ளோட் நிறுவனம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## கொழும்பு, கம்பஹாவுக்கு...

எவ்வாறாயினும், கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்கு போதுமான தண்ணீரைப் பெறுவதில் சிக்கல்களுள்ளன, ஆனால் அவற்றைத் தீர்ப்பதற்காக களனி ஆற்றின் குறுக்கே மணல் மேட்டை அமைத்துள்ளோம். இந்த அணையால் ஆற்றில் நீர்மட்டம் குறைவது, குடிநீரில் உப்பு கலந்த கடல் நீர் சேர்வது போன்ற முக்கிய பிரச்சினைளை கட்டுப்படுத்தியுள்ளோம். அந்த நிபந்தனையின் கீழ் கொழும்பு, கம்பஹா ஆகிய பகுதிகளுக்கு தொடர்ச்சியாக நீரை விநியோகிப்பதில் எமக்கு பிரச்சினை இல்லை.

## உலக சாதனை படைத்த...

சங்கரதாஸ் மற்றும் பாமினி தம்பதிகளின் மகள் கனிஷிகா. பொகவந்தலாவை ஹோலி ரோசரி மகா வித்தியாலயத்தில் 02ஆம் ஆண்டில் கல்வி கற்று வருகிறார்.

"மாணவியின் தொடர் முயற்சியினால் மனித உடலின் 423 உள் உறுப்புகளை படத்தில் அடையாளம் காட்டியவாறு 04 நிமிடங்களில் மனப் பாடமாக ஒப்புவித்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்தார். இதற்கான உலக சாதனை நிகழ்வு நேற்று (16) பொகவந்தலாவை ஹேலிரோசரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த சோழன் உலக சாதனை முயற்சியை அந்த நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீநாகவானி ராஜா நடுவராக நேரில் கண்காணித்து உறுதி செய்தார். சோழன் உலக சாதனை நிறுவனத்தின் பதக்கமும் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் உப தலைவர் ஸ்ரீநாகவாணி ராஜா, வித்தியாலத்தின் அதிபர் பி.குமரேசன். உப அதிபர் கிருபாகரன். பொகவந்தலாவ செலான் வங்கியின் முகாமையாளர், கேயார் லங்கா நிறுவனத்தின் இனைப்பாளர் இளையராஜா ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## GCE O/L பரீட்சை விடைத்தாள்...

ரீதியிலுள்ள நூறு மத்திய நிலையங்களில் எதிர்வரும் (27) வரை இடம்பெறும்.

## ஓமானுடன் இணைந்து...

தூதுவர் அஹமட் அலி சயீத் அல் ரஷ்த்துக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலிலே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

செய்கைகளுக்கு தேவையான யூரியா உரத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கு ஓமான் அரசாங்கம் ஆதரவு வழங்குவது குறித்தும் இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

# வெலிகம அறபாவில் இன்று மும்முனை கிரிக்கட் போட்டி

**வெலிகம தினகரன் நிருபர்**

*வெலிகம அறபா தேசிய பாடசாலையில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள 'BACK TO SCHOOL' நிகழ்ச்சியை முன்னிட்டு அறபியன் ஆசிரியர் குழாத்தினர் மாபெரும் மும்முனை கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.*

*இந்தப் போட்டி இன்று 17ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் கல்லூரி பதியுதீன் மஹ்மூத் விளையாட்டுத் திடலில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இப்போட்டியில் மாணவர் அணி, பழைய மாணவர் அணி மற்றும் ஆசிரியர் அணி என முத்தரப்புகள் மோதவுள்ளன.*

*இன்றைய தினம் பி.ப 1.30 மணியளவில் கல்லூரி அதிபர் எம்.டி.எம் முதஹ்ஹர் தலைமையில் வெற்றி பெறும் அணிக்கான வெற்றி கிண்ணம் மற்றும் பரிசளிப்பு வைபவமும் இடம் பெறவுள்ளதாக கல்லூரியின் (இணைப்பாட விதானம்) உதவி அதிபர் அஷ்ஷெய்க் முன்திர் (நளீமி) தெரிவித்தார்.*


## மாவட்ட செயலகம், அம்பாறை

### 2022/23 பெரும் போகத்தில் அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல், அரிசியாக மாற்றி விற்பனை செய்வதற்குப் பொருத்தமான வழங்குநர்களைத் தெரிவு செய்வதற்கு விலைமனுக் கோரல்

மேற்படி விடயத்தின் கீழ் 2023.08.02 திகதி இப்பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரம் தொடர்பானது. அதற்கமைய விலைமனுப் படிவம் விநியோகிக்கும் காலம் 2023.08.22 திகதி பி.ப. 03.00 வரை மற்றும் விலைமனுப்படிவம் பொறுப்பேற்கும் காலம் 2023.08.23 திகதி மு.ப. 10.00 வரை நீடிக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகிறேன்.

**மேலதிக தகவல்களுக்கு -**

**இணையத்தளம் : www.ampara.dist.gov.lk**

**தொலைபேசி இல. : 063-2224269/ 063-2224458**

**சின்தக அபேவிக்ரம,**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,**
**அம்பாறை மாவட்டம்.**

## NOTICE
## UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA
### VACANCIES FOR THE POSTS OF TEMPORARY POSITIONS

## WALK-IN INTERVIEW

Walk-in interview for the following posts will be held on **28th August 2023** and **29th August 2023** at the Boardroom of the University of Vavuniya, Pambaimadu, Vavuniya as follows:

1. **Faculty of Applied Science**
   Department of Bio-Science - **28th August 2023**
   i. Temporary Assistant Lecturer in Environmental Science **(9.30 a.m)**
   ii. Temporary Demonstrator in Environmental Science **(10.30 a.m)**

2. **Faculty of Business Studies**
   Department of Business Economics - **28th August 2023**
   i. Temporary Assistant Lecturer in Business Economics **(1.30 p.m)**

3. **Faculty of Applied Science (FAS)**
   Department of Physical Science - **29th August 2023**
   i. Temporary Assistant Lecturer in Information Technology **(9.30 a.m)**
   ii. Temporary Demonstrator in Information Technology **(9.30 a.m)**
   iii. Temporary Assistant Lecturer in Applied Mathematics & Computing **(10.30 a.m)**
   iv. Temporary Demonstrator in Applied Mathematics & Computing **(10.30 a.m)**

4. **Faculty of Technological Studies (FTS)**
   Department of Information & Communication Technology – **29th August 2023**
   i. Temporary Assistant Lecturer in Information Communication Technology **(1.30 p.m)**
   ii. Temporary Demonstrator in Information Communication Technology **(1.30 p.m)**

Applicants who are interested in the above posts are requested to visit University of Vavuniya Website **http://www.vau.ac.lk** to obtain further details.

**Registrar / University of Vavuniya**
16.08.2023

## VACANCIES
## UNIVERSITY OF VAVUNIYA

The University of Vavuniya will entertain applications from suitably qualified Sri Lankan citizens for the following posts.

**FACULTY OF APPLIED SCIENCE:**

**Department of Physical Science:**

i. Senior Lecturer Gr I/ Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Information Technology

**Note:**
Candidates who have BSc Honours in Information Technology or BSc Honours in Information & Communication Technology from a recognized university may apply. Preference will be given to those who have Postgraduate degree in Data Science, or Artificial Intelligence, or Cyber Security)

ii. Instructor in Computer Technology (On Contract)

**QUALIFICATIONS:**

- Senior Lecturer Gr.I/ Senior Lecturer Gr. II, Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary)-Ref. UGC Circular Nos.721, 935, 08/2016, 08/2016 (i), 08/2016 (ii), 08/2016 (iii) and 07/2018 in UGC Website
- Instructor in Computer Technology (On Contract)-Ref. UGC Commission Circular No.725

**REMUNERATION AND OTHER BENEFITS:**

| Posts | Salary Code | Salary Scale from 01.01.2020 | Academic Allowance |
|---|---|---|---|
| Senior Lecturer Gr.I | U-AC 3 (I) | Rs.91,310-7x2170-106,500 p.m | 151% |
| Senior Lecturer Gr.II | U-AC 3(II) | Rs.79,360-11x1630-97,290 p.m | 151% |
| Lecturer (Unconfirmed) | U-AC 3 (III) | Rs.69,580-5x1630-77,730 p.m | 131% |
| Lecturer(Probationary) | U-AC 3 (IV) | Rs.54,600-10x1335-67,950 p.m | 115% |
| Instructor in Computer Technology (On Contract) | | Rs. 50,625/- (Fixed) | |

Research allowance – 35% (Payable to the Academic Staff based on the research activity)
Additional monthly allowance – 20% (Payable to Permanent Post)
Cost of living allowance – Rs.7,800/-p.m.
Monthly Allowance – Rs.5,000/-p.m

**STATUTORY BENEFITS:**

- Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
- Membership in Universities Provident Fund.
- Membership in Pension Scheme in the University system, Gratuity payments, Employees' Trust Fund benefits for all permanent post.
- Free Medical Services.

**METHOD OF RECRUITMENT:**

By structured interview

**Closing Date : 08.09.2023**

Application form should be sent to the **Deputy Registrar, Establishments, University of Vavuniya, Pambaimadu, Vavuniya** by registered post along with photocopies of the Educational & Professional qualifications with statement of the Degrees and service certificates. In addition, **the receipt of the registered post and scanned copy of the application as pdf file** should be sent by e-mail on or before the closing date to the email address: **recruitments@vau.ac.lk**

***Required qualification, application form and other details*** are available in the University web **http://www.vau.ac.lk**. Downloaded application form should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the **Bank of Ceylon, Account No: 2364602** in favor of **Bursar, University of Vavuniya.**

**The post applied for should be marked on the top left hand corner of the envelope.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Boards should channel their applications through the Head of the respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar**
16.08.2023

# சவாலை சமாளிக்கும் மனிதர்களின் அனுபவங்கள்

## (சமகால பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் செயற்பாடுகள்)

**கிளிநொச்சி காவேரிக் கலா மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வண. பிதா யோசுவா அடிகளாரின் வழிகாட்டலுடன் செயற்படும் அந்நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் மோகன்தாஸ் திபாகர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**



**இன்றைய எமது நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

இலங்கையில் கடந்த காலங்களில் நடந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் எல்லாம் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவை அல்ல. நாட்டுக்கு பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்காமல் செய்யப்பட்ட வேலைத் திட்டங்கலே பாரிய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களாகும். திட்டமிடாமல் கட்டப்பட்ட கட்டடங்கள் பயன்படுத்தப்படாமல் அப்படியே இருக்கிறது. அவை தேவையற்ற முதலீடுகளாகும்.

இவ்வாறு பல கட்டடங்கள் செயற்பாடுகள் இல்லாமல் காடுகள் வளர்ந்து பாழடைந்து காணப்படுகின்றன. எந்தவொரு கிராம உத்தியோகஸ்தர் பிரிவுக்கும் திட்டமிட்ட அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதில்லை. தேவையற்ற இடங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு ஒன்றுக்கும் பயன்படாமல் பல கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு சீரழிந்து காணப்படுகின்றன.

உதாரணமாக கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே காணப்படும் எல்லையில் எழுதுமட்டுவாள் என்ற இடத்தில் பொதுச் சந்தை நிர்மாணிக்கப்பட்டு கடந்த 12 வருடங்களாக எந்தப் பயன்பாடும் இல்லாமல் அப்படியே இருக்கின்றன. எப்போதாவது ஒருவர் வந்து அங்கு வியாபாரம் செய்வார். அதே போன்று குருநாகல் வாரியப்பொலவில் நிர்மாணிக்கப்பட்ட சந்தை. இப்படி எமது நாட்டில் நிறையக் காணலாம். இவை எல்லாம் தேவையில்லாத முதலீடுகள் ஆகும்.

**அப்படியாயின் இப்பிரச்சினைக்கு நாங்கள் எவ்வாறு தீர்வு காணலாம் ?**

#இன்றைய பொருளாதார நெருக்கடியை எப்படி சமாளிக்கலாம் என்று யோசிக்கும் போது நான் கடந்த காலங்களையே நினைத்துப் பார்க்கின்றேன். கடந்த காலங்களில் நாங்கள் எப்படி வாழ்ந்தோம். எங்களுக்கான தேவைகளை எப்படி நிவர்த்தி செய்தோம். அவைகளை யாரும் மறுக்கவோ மறைக்கவோ இயலாது. அவை பிழை என்று சொல்லவும் இயலாது.

இன்று சர்வ சாதாரண ஒரு கல் வீடு கட்டுவதென்றால் 25 அல்லது 30 இலட்சம் தேவையாகும். அப்பொழுது மண் வீடு. ஓலைக் குடிசை போன்றவற்றிலேயே மக்கள் வாழ்ந்தனர். அது ஒரு குளிர்மையான வாழ்க்கை முறையோடு உடல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தார்கள். அற்புதமான வாழ்க்கை முறையாகும். வீட்டுக்கென காசைக் கொட்ட வேண்டிய அவசியமில்லை. அப்பொழுது ஒரு குடும்பத்தில் ஒன்று தொடக்கம் ஏழு பிள்ளைகள் இருப்பார்கள். இப்பொழுது ஒன்று தொடக்கம் மூன்று பிள்ளைகளுடன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர்.

அப்பொழுது ஏழு பிள்ளைகளுக்கான மூன்று நேரச் சாப்பாடுகள் வழங்கப்பட்டன. அந்த மூன்று நேரச் சாப்பாட்டுக்கான உணவுகளை அவர்களே உற்பத்தி செய்தார்கள். யாரும் போய் அவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கியதோ அல்லது அரசாங்கத்தின் சமுர்த்தி நிதி உதவி வழங்கப்பட்டதோ கிடையாது. அவர்களுக்குத் தேவையான உணவுகளை அவர்களே உற்பத்தி செய்து கொள்வார்கள். காணியை பயன்படுத்தி வீட்டுத் தோட்டங்களைச் செய்து அதிகளவு வருமானங்களைப் பெற்றார்கள். அத்துடன் வீட்டில் ஆடு, மாடு, கோழி என வளர்த்து அதிலிருந்து வருமானத்தைப் பெற்றனர். அக்காலத்தில் சீட்டு என்ற தொரு முதலீட்டுத் திட்டம் யாழ்ப்பாணத்தில் இருந்தது. யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் பொருளாதார ரீதியில் மிகவும் உயர்த்தி விட்டது என்று கூறினால் சீட்டு முறையாகும். ஆனால் இப்பொழுது அந்தச் சீட்டு முறை இல்லாமற் அருகிக் கொண்டு போய்க் கொண்டு இருக்கிறது. சில சில கிராமங்களில் மீளவும் துளிர் விட்டுக் கொண்டிருக்கின்றது.இந்தச் சீட்டு முறையினை சில சில கிராமங்களில் எங்களது காவேரிக் கலா மன்றம் ஊக்கப்படுத்தி வருகின்றன.

**காவேரிக் கலா மன்றம் இந்த சீட்டு முறையை ஊக்கப்படுத்துவதற்கான காரணம் என்ன?**

இந்தச் சீட்டு முறையை இல்லாமற் செய்தது வங்கியாளர்களாகும். அதில் முதலீடு செய்வதால் வட்டி விகிதம் தான் பணத்திற்கு இலாபம் கிடைக்கும். சீட்டு முறையில் வட்டி பெரியளவில் இல்லை. 20 பேர் சேர்ந்தால் ஒரு மாதத்திற்குரிய பணம் ஒரு நபருக்குச் செல்லுகிறது. அவருக்குரிய பணம் எந்தவிதமான வட்டியும் இல்லாமற் கையில் பெற்றுக் கொள்கிறார். வங்கியில் வட்டி செலுத்துவது போன்று செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஊர் மக்கள் அந்தச் சீட்டு முறையில் இருக்கும் பொழுது அந்தக் குழுவின் ஒருவர் அந்தப் பணத்தைப் பெற்று மன தைரியத்துடன் ஒரு தொழிலைச் செய்து முன்னேறி விடுவார். அப்பணத்தின் மூலம் இலாபத்தைத் திரட்டி சீட்டுப் பணத்தை கட்டுவார். வங்கியில் கடன் எடுப்பது அவ்வாறு இல்லை. வங்கியில் கடன் எடுத்தால் உயர்ந்த வட்டி செலுத்த வேண்டும். சில நேரம் அப்பணத்தை எடுத்து வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தி அது நட்டம் அடைந்தால் அது திரும்பத் திரும்ப அழுத்தங்களை கொடுக்கும். சீட்டு என்பது மிகச் சிறியளவிலும் செய்யலாம். பெரியளவிலும் செய்யலாம். இன்னும் செய்து கொண்டு இருக்கின்றனர். இந்தச் சீட்டு முறையை கண்டிப்பாக கொண்டு வர வேண்டும். அந்தக் காலத்தில் சீட்டைக் கட்டி அதில் இருந்து பெரிய பணக்காரர்களாய் வந்தவர்களே அதிகம்.

**நீங்கள் கூறும் சீட்டு முறை கூட்டுறவுத் துறையில் இன்னும் இருக்கின்றது தானே?**

உண்மைதான். பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் சீட்டு முறை என்று இயங்கிய போதிலும் கிராமிய மக்கள் சேர்ந்து பிடித்துச் செயற்படும் சீட்டு முறை போன்று நம்பிக்கையாக இருக்குமோ அந்தளவுக்கு அது நம்பிக்கையை தரக் கூடிய அளவுக்கு இல்லை. அது ஒரு தனியார் நிறுவனக் கம்பனியாக மாறி விட்டது. அது கம்பனி என்பதால் அதற்குரிய செலவுகள், வரிகள் என அறவிடப்படும். அவை புறம் இருந்தாலும் ஒரு சமூகம் செய்கின்ற போது அந்த அறவீடுகள் இடம்பெறுவதில்லை. சீட்டு என்பது ஒரு மரபு. ஒரு பாரம்பரியமான சடங்கு முறைதான் சீட்டு ஆகும்.

**பொருளாதார நெருக்கடிக்கு நமது நாட்டில் நிலவும் வேறு காரணிகள் என்ன?**

யானை, குரங்களின் தொல்லை எமது நாட்டைப் பொறுத்தவரையிலும் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பாகவும் தடையாகவும் அமைந்துள்ளன. எனினும் குரங்கு, யானைகள் இலங்கையின் சுற்றுலாத் துறையை கவரக் கூடியதாகவும் உள்ளன. ஆனாலும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வேண்டி யானை, குரங்குகளை நாம் அழிக்க முடியாது. வீட்டுத் தோட்டங்களை குரங்குகளில் இருந்து பாதுக்காக்கக் கூடிய வசதிகளோ அல்லது குரங்குகள் வந்தால் பிடித்து கொண்டு போய் காட்டுக்குள் விடும் வழி வகைகளையே செய்ய வேண்டும்.

**இவற்றைத் தடுப்பதற்கான உங்களது ஆலோசனைகள் எவை?**

ஒரு பகுதியில் யானைகள் அதிகமாக இருக்கும் என்று கருதப்பட்டால் ஒரு குறித்த இடத்தை தெரிவு செய்து அதில் யானைகள் சரணாலயத்தை அமைத்தல் வேண்டும். அந்த இடத்தை விட்டு யானைகள் வெளியே செல்லாமல் அவைகளுக்குத் தேவையான உணவுகளை அங்கு கொண்டு போய் போட வேண்டும். பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவு உணவுகளைக் கொண்டு போய் போடலாம். பொதுவாக மாநகர சபை, பிரதேச சபை ஆகிய திண்மக் கழிவு முகாமைத்துவப் பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற உணவுகளைக் கூட அங்கு கொண்டு போய் போடலாம். யானைகள் சாப்பாடு எங்கு கிடைக்கும் என்று தேடி வரும் போதுதான் தோட்டங்கள,விவசாய நிலங்கள் போன்றவற்றில் சாப்பாடு வருகின்றனவே தவிர அவை தோட்டங்களை, விவசாய வயல்களை சாப்பிட வேண்டும் என்று வரவில்லை. அவைக்கு பசி வரும் போது உணவைத் தேடி தோட்டங்களுக்கு வருகின்றன. யானைகள் அதிகம் வாழும் குறித்த இடங்களைத் தெரிவு செய்து யானைச் சரணாலயங்கள் அமைத்தால் ஓரளவுக்கு இந்த காட்டு யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்தலாம். அதேவேளை சுற்றுலாத் துறைக்கான ஓர் ஊக்குவிப்பாகவும் அது அமையும். அதேபோன்று குரங்குகளுக்கும் சரணாலயங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். இவையும் சரியான முறையில் பாதுகாப்புடன் அமைக்கப்படுதல் வேண்டும்.

**இன்றைய பொருளாதார நெருக்கடியில் தற்போதைய மக்கள் எவ்வாறான வாழ்க்கையினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று கூறுவீர்களா?**













பழைய வாழ்க்கை முறைக்கு மக்கள் திரும்புதல் வேண்டும். அதற்கு வருவதற்கு அவர்களுக்கு கடினமாக இருக்கும். ஏனென்றால் பழைமையான வாழ்க்கை முறையில் வாழ்ந்த சந்ததியினர்கள் இல்லாமற் போய் விட்டார்கள். அவர்கள் இருந்திருந்தால் அந்தப் பழைமையான வாழ்க்கை முறை எந்தளவுக்கு தாற்பரியமானது என்பதை தற்போதைய சூழலில் வாழும் சந்ததியினர்களுக்குத் தெரிந்திருக்கும்.

நாங்கள் கோழி வளர்ப்பதற்கு கடையில் மருந்து வாங்கி கொடுத்திருப்போமா? அல்லது காசு கொடுத்து தீனி வாங்கி கொடுத்து இருப்போமா? இல்லை. மாட்டுக்கு மருந்து வாங்கி கொடுத்து இருப்போமா? இல்லை. சுதந்திரமாக மேய்ந்தது. சுதந்திரமாக வருமானத்தைப் பெற்றோம். நிறைவான உணவுப் பழக்க வழக்கத்துடன் நல்ல சமூகக் கட்டமைப்புடன் அக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

குடிசைக் கைத்தொழிலை வடக்கில் தெரிந்த வகையில் செய்து வருகின்றனர். பனை உற்பத்தி கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில் என்பன நடந்து கொண்டிருக்கின்றன. அவை அவர்களது குடும்ப வருமானத்தைக் கொண்டு நடத்தக் கூடியதாக இருக்கின்றதே தவிர பெரியளவில் அவற்றை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து நமது நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித் தரக் கூடியதாக இதுவரைக்கும் இல்லை. இதற்கான உண்மையான காரணம் என்னவென்றால் நமது நாட்டில் குடிசைக் கைத்தொழிலாளர்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்குகின்றார்கள். ஆனால் அவற்றை பகிர்ந்தளிக்கின்ற போது பயனாளிகளுக்கு கிள்ளித் தான்காசு கொடுக்கினறனர்.

அதுவும் ஒன்று இரண்டு பேர்களுக்குத் தான் ஒவ்வொரு மாவட்டங்களிலும் வழங்கப்படும். அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் என்ன செய்கிறார்கள் என்பது பற்றிய முகாமைத்துவம் செய்வதோ அல்லது அறிவூட்டல்களை வழங்குவதோ இல்லை.

மொத்தமாக ஒரு தொகை பணம் கிடைக்குமாயின் அப்படியே பழையபடி தொழிலைச் செய்து அதன் பணத்தைக் கட்டிக் கொண்டு தொழிலைச் செய்கின்றோமே தவிர புதிய தொழில் நுட்ப முறைகளுக்குள் சென்று மின் இயந்திரங்களைப் பயன்படுத்தி அதிகளவு உற்பத்தி செய்து அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று சொல்வதற்கு ஆட்களில்லை. ஆனாலும் காவேரிக் கலாமன்றம் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்கின்ற வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. நாட்டில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாயின் எங்களது வீட்டுக்குள் இருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். அதற்கு வீட்டுச் சமூகம்தான் முக்கிய தூண்கள். சிறு கைத்தொழிலையும் நாங்கள் ஊக்குவித்து வருகின்றோம்.

**காவேரிக் கலா மன்றம் பொருளாதார மேம்பாட்டுக்கான எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது?**

சிறு கைத்தொழில் செய்வோருக்கு சரியானதொரு சந்தை வாய்ப்புகளோ திட்டங்களோ இல்லை. இவ்வாறான விடயங்களை நாங்கள் கிராம மட்டத்திலுள்ள வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் கதைத்து ஆலோசனைகளை வழங்கி வருகின்றோம். அதாவது அவர்கள் எவ்வாறான வியாபாரங்களைச் செய்தால் அதிகம் வருமானம் ஈட்டலாம். அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளையும் வழங்கி வீட்டோடு முடங்கிக் கிடந்தவர்களை வெளியுலகிற்கு கொண்டு வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கிராம மட்டத்தில் வீட்டோடு பெட்டிக் கடைகளை வைத்திருப்பவர்கள், அல்லது வீட்டோடு வியாபாரங்களை செய்பவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு பொது இடத்தில் சிறு கைத்தொழில் கண்காட்சியை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் ஒழுங்குகளையும் செய்து கொடுக்கின்றோம். முப்பது நாற்பது சிறு கைத்தொழிலாளர்கள் கலந்து கொள்வார்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைக் காட்சிப்படுத்துவார்கள். அந்தப் பொருட்கள் சம்பந்தமான விளக்கங்களை அங்கு வரும் வியாபாரிகளுக்கு வழங்கப்படும். பெரியளவிலான கொள்முதல் செய்பவர்களின் அறிமுகங்கள் கிடைக்கும். இதன் மூலம் அவர்களுக்கு வியாபாரம் விஸ்தரிக்கப்பட்டு போதியளவு வருமானமும் கிடைக்கக் கூடியளவுக்கு சந்தர்ப்பம் உருவாகியுள்ளன. நிறைய ஏற்றுமதியாளர்கள் இந்தக் கண்காட்சிக்கு வருகின்றனர். அவர்களுடன் தொடர்பினைக் கொண்டு ஏற்றுமதிக்கான ஒழுங்குகளை கொஞ்சம் கொஞ்சமாக செய்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. இவற்றை காவேரிக் கலா மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

**தற்போது நீங்கள் வேறு என்ன முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றீர்கள்?**

நாட்டுக் கோழி வளர்ப்பு முறையில் மக்களை அதிகளவு ஊக்குவித்து வருகின்றோம். அது தற்போது வீட்டில் இருந்து அதிகளவு வருமானம் ஈட்டக் கூடிய விடயமாக இருக்கின்றது. ஒரு நாட்டுக் கோழி முட்டையின் விலை ரூபா 100 தொடக்கம் 150 வரையிலும் சென்றது. தற்போது யாழ்ப்பாணத்தில் ஒரு நாட்டுக் கோழி முட்டையின் விலை ரூபா 65 ஆவாகும்.

இந்த கோழி வளர்ப்பு முறையினை பழைய முறையிலேதான் செய்து வருகின்றோம். மின்னியல் மூலம் குஞ்சுகளைப் பொறிக்கச் செய்யாமல் கோழியை அடைப்படுக்க வைத்து குஞ்சுகளைப் பெற்று வருகின்றோம். இக்குஞ்சுகளுக்கு நோய்த் தாக்கம் ரொம்பக் குறைவு. கோழியின் இறப்பு விகிதம் குறைவு. அதற்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம். அவற்றுக்கு எந்த நோய்த் தொற்றும் இல்லை. நோய் நன்கு பெருகிக் கொண்டிருக்கின்றது. வடக்கில் சாதாரண குஞ்சு ரூபா 350 – 550 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. மூன்று மாத விடலைக் குஞ்சு விறாத்துச் குஞ்சு ரூபா 1200 – 1300 வரை விற்பனை செய்யப்படுகிறது. சராசரியாக ஒரு வீட்டில் 10 கோழிகள் வைத்திருந்தால் அவர் இரு கோழிகளை எடுத்து ஒரு கோழிக்கு தலா 20 முட்டை விகிதம் அடை வைத்தால் 21 நாளைக்கு பின்பு அவர் வீட்டில் 35 கோழிகள் மேயும். அவருக்கு ஒரு மாதத்தில் கிட்டத்தட்ட ரூபா 10,000 15,000) வரை வருமானம் கிடைத்து விடும். இக்கோழிகளை வளர்த்து முட்டைகளை விற்பனை செய்தால் இதை விட மேலும் வருமானம் வரும்.

கடந்த மாதம் கிளிநொச்சி ஊற்றுக் குளம் பிரதேசத்தில் நாட்டுக் கோழிக் கண்காட்சியை நடத்தினோம். 30 – 40 கோழி வளர்ப்பாளர்கள் கலந்து கொண்டனர். விதம் விதமான நாட்டு கோழிகளை கண்காட்சியில் கொண்டு வைத்திருந்தார்கள். அது என்ன இனம். எத்தனை முட்டையிடும். எவ்வளவு காலம் வாழும், எத்தனை கிலோ இறைச்சி எடையைக் கொண்டது. என்னென்ன நோய் வரும். அவைகளுக்கு என்ன சாப்பாடுகள் கொடுக்க வேண்டும். கோழிகளுக்கு வழங்க வேண்டிய 40 வகையிலான தின்பண்டங்கள் எல்லாம் இக் கண்காட்யில் காட்சிப்படுத்தப்பட்டன இப்படியான தொரு கண்காட்சியை இலங்கையில் யாருமே செய்ய வில்லை. முதன்முதலாக காவேரிக் கலாமன்றம் தான் செய்தது என்று குறிப்பிடலாம். எங்கேயாவது நாட்டுக் கோழிக் கண்காட்சி நடந்தது என்று கூறுங்கள். இல்லை என்றுதான் கூறலாம்.

**இறுதியாக நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

நான் இந்தியா – தாய்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளேன். இவ்விரண்டு நாடுகளும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளாகும்..அங்கு வியாபார நிலையங்களை பார்த்தேன். எமது நாட்டுக்கும் அந்த நாடுகளுக்குமிடையே ஒரு வித்தியாசம் பார்க்கக் கூடியதாக இருந்த விடயம் என்ன வென்றால் அந்நாடுகளில் எந்தநேரமும் வியாபார நிலையங்கள் திறந்திருந்தன. வீதியோர வியாபார நிலையங்கள் தான் அதிகம்.நடமாடும் வியாபாரங்கள் நிறைய காணக் கூடியதாக இருந்தன.

நடமாடும் உணவகத்திற்குச் சென்றால் ஒரு டி. ஏதோ நமக்குத் தேவையான உணவைச் சாப்பிட்டு விட்டு வந்திடலாம். பெரிய நட்சத்திர ஹோட்டலுக்குச் செல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. பெரிய ஹோட்டலில் சாப்பிடும் சாப்பாடு தான் நடமாடும் ஹோட்டல்களிலும் வாங்கலாம். ஒருவர் காலை 6 முதல் மலை 3 மணி வரையில் ஒரு கடையில் வேலை செய்வார். பின்பு அவர் தனக்கு சொந்தமான கடையினை மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை நடத்துவார். ஒவ்வொரு மனிதனும் சுறுசுறுப்பாக இயங்குவார்கள். எமது நாட்டுக்கும் இரவு சந்தைகள் அவசியம்.

இந்தியா, தாலாய்ந்து நாடுகளில் உள்ளன போன்று ஒவ்வொரு பிரதேசங்களிலும் இரவு நேர சந்தைகள் அமைக்கப்படுதல் வேண்டும். சகல பொருட்களும் இரவில் வாங்க வேண்டிய வசதிகள் இடம்பெற வேண்டும். இவை உற்பத்தியாளர்களுக்கு மேலும் கைகொடுக்கும். நாட்டுக்கு வருமானம் அதிகரிக்கும் . நாட்டுக்கு அந்நிய செலவாணி வந்து சேரும். காவேரிக் கலா மன்றத்தின் முக்கிய பிரதான நோக்கம் எந்தவொரு நபரையும் விவசாயிகளாய் மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். எமது நாட்டில் எல்லா வளங்களும் இருக்கின்றன.ஆனால் அதை நாங்கள் பயன்படுத்துவது இல்லை. அவர்களுடைய மூளையைச் சலவை செய்து வெறுமையாகக் கிடக்கும் இடங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு விழிப்புணர்வுகளை செய்து வருகின்றோம். அதே போன்று தோட்டத்திற்குத் தேவையான தண்ணீர் வசதிகள் விதைகள் வழங்குதல் போன்ற அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக் கொடுத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். வடக்கு கிழக்கு போன்ற பகுதிகளில் நிறைய இத்தகைய மாற்றங்களை நாங்கள் கொண்டு வந்துள்ளோம் என்று குறிப்பிட்டுக் கூறலாம். காவேரிக் கலா மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி வணபிதா யோசுவா அடிகளாரின் வழிகாட்டலுடன் இத்தகைய செயற்றிட்டங்களை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம் என்று கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

**செவ்வி – இக்பால் அலி**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 01ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 29

## குறள் தரும் சிந்தனை



மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்

பண்பு இல்லாதவர்கள் உயர்ந்த பதவியில் இருந்தாலும் உயர்ந்தோர் அல்லர்; இழிவான காரியங்களில் ஈடுபடாதவர்கள் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் உயர்ந்தோரேயாவார்கள்.

# நாட்டின் சக்தி வலு தேவையை நிறைவேற்றும் இடமாக மன்னார்

இன்றைய நவீன யுகத்தில் சக்தி வலு மிக முக்கியத்துவமான ஒன்றாகவும் அத்தியாவசியமானதாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்றது. உலகில் சக்தி வலு பெற்றுள்ள இடத்தை வேறெதுவும் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

உணவு சமைக்கவும் வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளவும் மாத்திரமல்லாமல் விவசாயத்திற்கும் தொழிற்சாலைகள் இயங்கவும் சக்தி வலு இன்றியமையாததாக உள்ளது.

இந்நிலையில் சக்தி வலுவின் தேவையும் பயன்பாடும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது. அதன் காரணத்தினால் சக்தி வலுவை உற்பத்தி செய்வதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் பல்வேறு இயற்கை வளங்களை பயன்படுத்தும் முறைகளும் புழக்கத்திற்கு வந்துள்ளன. அவற்றில் நீர், காற்று, கடலலை, பெற்றோலியம் என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றை விடவும் நிலக்கரி, அணுசக்தி போன்றவற்றைக் கொண்டும் சக்தி வலு உற்பத்தி செய்யப்படுகின்றது.

அந்த வகையில் நீரை அடிப்படையாகக் கொண்டு சக்தி வலுவைப் பெற்றுக்கொள்ளும் முறைமை 1930 களில் பொறியியலாளர் டி. ஜே. விமலசுரேந்திரவினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அன்று தொடக்கம் சக்தி வலுவின் தேவையும் பயன்பாடும் தொடர்ந்தும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இவ்வாறான சூழலில் நீரை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக்கொள்ளப்படும் சக்தி வலுவைக் கொண்டு நாட்டின் தேவையை நிறைவேற்ற முடியாது. அதனால் நாட்டின் சக்தி வலு தேவையை நிறைவேற்றுவதற்காக நீரில் மாத்திரம் தங்கியிராது ஏனைய இயற்கை வளங்களைப் யன்படுத்தி அதனை உற்பத்தி செய்து கொள்வதன் அவசியம் குறித்தும் 1990 களிலேயே உணரப்பட்டது.

இந்நிலையில் நீரை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் சக்தி வலுவுக்கு மேலதிமாக டீசல், நிலக்கரி, சூரியசக்தி, காற்று என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் சக்தி வலுவை உற்பத்தி செய்து அதன் தேவையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்து வளங்களையும் கொண்டு சக்தி வலுவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைமை நாட்டிலுள்ளது. அதன் பயனாக இடையூறுகள் இன்றி தொடராக சக்தி வலுவை மக்களால் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

அப்படியிருந்தும் நாட்டின் சக்தி வலு தேவை அதிகரித்ததாகவே காணப்படுகின்றது. அதிலும் தற்போது நாட்டில் நிலவும் வரட்சிக் காலநிலையின் விளைவாக நீர்த்தேக்கங்களதும் நீரேந்து பிரதேசங்களதும் நீர் மட்டம் வேகமாகக் குறைவடைந்து வருவதால் எதிர்வரும் நாட்களில் மின்வெட்டு முன்னெடுக்கப்பட வழிவகுத்து விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

ஆன போதிலும் மின்சக்தி எரிசக்தி அமைச்சு, மின்வெட்டு இன்றி 24 மணி நேரமும் தொடராக மின்சாரத்தை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை மடு மாதா ஆலயத் திருவிழாவில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'மன்னார் பிரதேசம் அதிகளவு புதுப்பிக்கத்தக்க சக்தி வலு மூலங்களைக் கொண்டுள்ளது. இங்கு கிடைக்கப்பெறும் சூரிய சக்தி, காற்றாலை, பசுமை ஆற்றல் என்பவற்றின் மூலம் மன்னார் மாவட்டத்தை வலுசக்தி மையமாக உருவாக்க முடியும். பூநகரியை எரிசக்தி கிராமமாக உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்' என்று குறிப்பிட்டுள்ளதோடு 'இந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அனைத்தும் புனித பூமியும் இப்பகுதி வனமும் பாதுகாக்கப்படும் வகையில் முன்னெடுக்கப்படும். இப்பணிகளின் போது இங்குள்ள அருட்தந்தைகளது ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் பெற்றுக்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பூமத்திய ரேகை கோட்டுக்கு அருகாமையில் அமைந்திருக்கும் நாடுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கையின் சக்தி வலு தேவையை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூலவளங்கள் இயற்கையாகவே இங்கு கிடைக்கப் பெறக்கூடியனவாக உள்ளன.

வருடம் முழுவதும் சூரிய வெளிச்சமும் போதிய காற்றும் மழைவீழ்ச்சியும் கிடைக்கப்பெறும் நாடாக மாத்திரல்லாமல் நாலாபுறமும் கடலால் சூழப்பப்பட்டிருப்பதால் கடலலைகளைப் பயன்படுத்தியும் சக்தி வலுவை உற்பத்தி செய்து கொள்வதற்கான சாதக சூழலையும் கொண்டுள்ளது. அத்தோடு திண்மக் கழிவுப்பொருட்களை கொண்டும் சக்தி வலுயை உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

ஆகவே ஜனாதிபதியின் திட்டத்திற்கு அமைய இலங்கையின் சக்தி வலு தேவையை நிறைவேற்றுவதற்கான மையமாக மன்னார் மாவட்டம் விளங்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை. இது நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்கு வித்திடும் என்றால் அது மிகைகாதது.

editor.tkn@lakehouse.lk

# நாற்பது வருடகால எமது கண்ணீரை துடைத்துள்ளார் முதல்வர் ஸ்டாலின்!

## அகதிமுகாம் கொட்டிலில் வாழ்ந்து, அனைத்து வசதிகளுடனான தனித்தனி வீடுகளில் வசிக்கப் போகும் இலங்கையர்கள் உருக்கத்துடன் கூறும் நன்றி!

திராவிட மொடல் ஆட்சியில்தான் இலங்கைத் தமிழர் நலன் மீது புதிய அக்க றை பிறந்துள்ளது. ஆட்சிக்கு வந்த உடனேயே 'அகதிகள் முகாம்' என்ற வார்த்தையை 'மறுவாழ்வு மையம்' என்று மாற்றினார் முதலமைச்சர் ஸ்டாலின். உடனே பலர் சொன்னார்கள் பெயர்ப் பலகையை மாற்றிவிட்டால், இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கை மாறிவிடுமா என்று. அதற்குத் தனது தரமான செயல் மூலம் பதிலடி கொடுத்திருக்கிறார் ஸ்டாலின்.

இவ்வாறு கூறுகின்றனர் தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள்.

"தமிழக அகதிமுகாம்களிலுள்ள இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக 217 கோடி ரூபா நிதியை ஒதுக்கி இருந்தார் ஸ்டாலின். அதன் பலனாக இன்று சேலம் மாவட்டத்தில் பவளத்தானூர், குறுக்குப்பட்டி, அத்திக்காட்டனூர் ஆகிய பகுதிகளில் கடந்த 40 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த தகரக் கொட்டகைகள் அகதிகள் முகாம் இன்று நகரமாக மறுமலர்ச்சி பெற்றுள்ளது. இந்த மக்களுக்காக ஏறக்குறை 244 புத்தம் புதிய வீடுகளைக் கட்டித் தந்துள்ளார் முதலமைச்சர் ஸ்டாலின். அதற்கான விழா விரைவில் நடைபெற உள்ளது. தகரக் கொட்டையில் தவியாகத் தவித்துவந்த நம் சொந்தங்கள் இனி, அழகான கொன்கிரீட் வீடுகளுக்குள் கால்வைக்க உள்ளார்கள்" என்றும் இலங்கைத் தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

இருண்டு போன வாழ்க்கையிலிருந்து இனிமையான வாழ்க்கைக்கு அந்த மக்கள் மாறப் போகிறார்கள்.

32 வயதான இளைஞர் யானதன் இது பற்றி விபரிக்கையில் "எனது தாய், தந்தையர் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தவர்கள். நான் தமிழ்நாட்டில்தான் பிறந்து வளர்ந்தேன். ஆரம்ப காலத்தில் நான் பள்ளியில் படிக்கவும் அது தொடர்பான ஆவணங்களைத் தயார் செய்வதும் பெரிய சவாலாக இருந்தது.

இன்றைய காலத்தில் எங்கள் பிள்ளைகளில் இரண்டு பட்டங்களைப் பெற்றவர்கள் 500 பேருக்கு மேல் இருக்கிறார்கள். இந்நிலையில் தான் 2021 இல் கொரோனா காலகட்டத்தில் தி.மு.க ஆட்சி வந்தது. அதன்பின்னர் முதல்வர் ஸ்டாலின் 110 விதியின் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி 217 கோடி ரூபாய் நிதியை எங்கள் மக்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கினார். அதனால், எங்கள் மாணவர்களுக்குக் கிடைத்துவந்த கல்வி உதவித்தொகை இப்போது 3 மடங்கு அளவுக்கு உயர்ந்துள்ளது. இதனால் மேற்படிப்புக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

அதைப்போலவே தமிழ்நாட்டுப் பெண்களுக்குக் கிடைப்பதைப் போலவே எங்கள் பெண்களுக்கும் சுய உதவிக்குழு நிதியை அதிகரித்துள்ளார்கள். குடியுரிமை வேண்டும் என்பது எங்களது நீண்டகாலக் கோரிக்கை. அதை ஏற்றுக்கொண்டு அதற்காகத் தனிக்குழுவை முதல்வர் ஸ்டாலின் அமைத்துள்ளார். அதில் எங்கள் மக்களையும் உறுப்பினராக இணைத்துள்ளார்.

ஆறு மாதங்களுக்கு முன், அருகில் உள்ள பாம்பம்பாடி என்ற கிராமத்தில் எங்களது இலங்கைத் தமிழ் மக்களுக்காக 234 புதிய வீடுகளை முதல்வர் ஸ்டாலின் கட்டித் தர உத்தரவிட்டார். அதில் எங்களுக்குப் படுக்கையறை, சமையல் அறை, தனி கழிப்பறை, குடிநீர் வசதி, எங்கள் பகுதியில் நூலகம், நியாயவிலைக்கடை, அங்கன்வாடி, தண்ணீர் தொட்டி, சமுதாயக் கூடம் எனப் பல அடிப்படை வசதிகளுடன் அந்த வீடுகளைக் கட்டி வருகின்றனர்.



அதற்கான பணிகள் விரைவில் நிறைவடைய உள்ளன" எனக் குறிப்பிட்டார்.

"இந்த வீடுகளைப் பார்க்கும்போதே மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக எங்கள் வாழ்க்கை நரகத்தில் இருப்பதைப் போன்று இருந்தது. மழைக்காலம் என்றாலும் வெயில் காலம் என்றாலும் அது எங்களுக்குக் கஷ்ட காலமாகவே இருந்து வந்தது. ஒரு நிம்மதியான உறக்கம் இல்லாமல் வாழ்ந்துவந்தோம். அதை எல்லாம் இந்தப் புதிய வீடு மாற்றப் போகிறது" என்றார் கவிதா நாகநாதன் என்பவர்.

"நான் இந்த முகாமில் கடந்த 32 ஆண்டுகளாக வாழ்ந்துவருகிறேன். எனக்கு 3 குழந்தைகள் இருக்கிறார்கள். கணவர் இறந்துவிட்டார். 2 பிள்ளைகளைப் படிக்க வைத்தது, கல்யாணம் கட்டிக் கொடுத்தது எல்லாம் இந்த முகாமில் தான். ஒரு பையனுக்கு மட்டும் கல்யாணம் ஆகவில்லை. அவன் வேலைக்குச் சென்று வருகிறான். சில மாதங்கள் முன்பாக வந்த மழையில் எங்கள் பழைய முகாமில் தண்ணீர் புகுந்துவிட்டது. பல வீடுகளில் வெள்ளம் வந்துவிட்டது. அப்போது, மழைக்காலம் என்பதால் பாம்பு, பூச்சிகள் எல்லாம் வீட்டுக்குள் வந்துவிட்டன. இரவு நேரங்களில் தூக்கம் இல்லாமல் தவித்தோம். இப்போது முதல்வர் ஸ்டாலின் எங்களுக்கு என்று சீமெந்து வீடுகளைக் கட்டித் தந்துள்ளார். நாங்கள் இப்படிப்பட்ட வீடுகளில் வாழ்வோம் என்று நினைத்துக் கூடப்பார்த்ததில்லை. தனித்தனி வீடுகளைக் கட்டித்தந்துள்ளார்.

நாங்கள் இந்த 32 ஆண்டுகளாக ஒரே முகாமில் ஒட்டுமொத்தமாக வாழ்ந்துவந்தோம். யாருக்கும் தனிப்பட்ட வாழ்க்கை என்று இல்லை. சாப்பிடுவது தொடங்கி கழிவறைக்குச் செல்வது வரை எல்லாம் ஒன்றுதான். அதை எல்லாம் தாண்டி இன்றைக்குத் தனி வீட்டுக்குப் போகப் போகிறோம். அதில் சகல வசதிகளும் இருக்கின்றன. இத்தனை காலம் ஓலைக் குடிசைபோல இருந்த வீட்டில் வாழ்ந்தோம். அந்தக் கஷ்டம் எல்லாம் சொல்ல ஒரு நாள் போதாது. படாத கஷ்டம் இல்லை. அனுபவிக்காத துயரம் இல்லை. அப்படியே எங்கள் பாதி ஆயுள் கரைந்துவிட்டது" என்கிறார் அவர்.

தர்ஷினி என்பவர் கூறும் போது "எங்கள் குடும்பம் 1990இ ல் இலங்கையிலிருந்து தமிழ்நாடு வந்தது. அப்போது நான் 6 மாதக் குழந்தை. நான் படித்தது எல்லாம் தமிழ்நாட்டில்தான். இத்தனை வருடங்களாக நாங்கள் கஷ்டத்தில்தான் வாழ்ந்தோம். இப்போது ஸ்டாலின் ஐயா ஆட்சியில் வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார். எங்களுக்கு இதுவரை கிடைத்துள்ள நலத்திட்டங்கள் எல்லாம் கலைஞர் ஆட்சியில்தான் கிடைத்திருக்கிறது. அவருக்கு அடுத்து இப்போது அதே அளவுக்கு ஸ்டாலின் பல உதவிகளைச் செய்துவருகிறார். இந்த வீடு கட்டிக் கொடுத்த விஷயத்தில் ஸ்டாலின் எல்லோரையும்விட பல மடங்கு எங்கள் மனதில் உயர்ந்துவிட்டார். இவ்வளவு காலம் எங்களை அகதி என்று சொல்லி வந்தார்கள். அவர் ஆட்சியில்தான் மறுவாழ்வு மையம் என மாற்றி இருக்கிறார்கள். அகதி வாழ்வு தந்த வலியை உங்களுக்குப் புரியவைக்க முடியாது. அவருக்கு எங்கள் முகாம் மக்களின் சார்பாக நன்றி சொல்லிக் கொள்கிறேன். அவர் செய்த உதவிக்கு வார்த்தைகளால் நன்றி சொல்ல முடியாது" என்றார்.







# அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரிக்கான இஸ்லாம் பாட பயிலுனர் எண்ணிக்கை அதிகரிப்பு

## பைசல் காசிம் எம்.பி மேற்கொண்ட நடவடிக்கை வெற்றி



அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரிக்கு இஸ்லாம் பாடநெறி ஆசிரிய பயிற்சிக்காக மாணவிகளை உரிய எண்ணிக்கையில் உட்சேர்த்தலுக்கான தனது இடைவிடாத முயற்சிக்கு பலன் கிடைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரிவித்தார்.

2019ஆம் மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தேசிய கல்விக்கல்லூரிகளுக்கு ஆசிரியப் பயிற்சிக்காக மாணவ, மாணவிகளை உட்சேர்த்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 2023.07.22 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரிக்கு இஸ்லாம் பாட நெறிப் பயிற்சிக்காக 20 மாணவர்களை மாத்திரம் உள்வாங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலே இதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் வருடத்திற்கு 25_30 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுவரும் நிலையில், கொரோனா தொற்றினால் மாணவர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்படவில்லை. இதனால் இவ்வருடம் இரண்டு வருட உள்ளீர்ப்புகள் இடம்பெறுதல் வேண்டும் என்னும் அடிப்படையில் 60 மாணவர்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

ஆனால் இரண்டு வருடத்திற்குமாக 20 மாணவர்கள் உள்வாங்கப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இதனால் மாணவ, மாணவிகள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டதுடன், குறித்த விடயத்தை பலரும் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இதனையடுத்து இவ்விடயத்தை பைசல் காசிம் எம்.பி கல்வி அமைச்சு மட்டத்திற்குக் கொண்டு சென்றார். அதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவைச் சந்தித்து குறித்த விடயம் தொடர்பாக விளக்கிக் கூறினார். ஆட்சேர்ப்பு எண்ணிக்கையை அதிகரிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்திருந்தார். இதன் காரணமாக இரண்டு வருடத்திற்குமாக 60 மாணவர்களுக்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளை அமைச்சர் கேட்டுக் கொண்டார் .

இந்நிலையில் குறித்த 60 மாணவிகளை வேறு கல்விக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அறிந்து கொண்ட அவர் மீண்டுமொரு முறை கல்வி அமைச்சரைச் சந்தித்து அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரிக்கு உட்சேர்த்துக் கொள்வதற்குத் தெரிவாகிய 60 ஆசிரிய பயிற்சிக்கான மாணவிகளை வேறு கல்விக் கல்லூரிகளில் உள்வாங்குவதற்கான நடவடிக்கையினை தடுத்து நிறுத்தியிருந்தார்.

மேலும் இஸ்லாம் பாடத்திற்காக தெரிவு செய்யப்பட்ட அனைவரையும் அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரிக்கு உட்சேர்த்துக் கொள்ளும் நிலையினை அவர் உறுதிப்படுத்தியிருந்தார்.

இம்முயற்சிக்குத் துணைபுரிந்த ஜனாதிபதி, கல்வி அமைச்சர் மற்றும் தன்னுடன் இணைந்து ஒத்துழைப்பு நல்கிய முஷாரப் எம்.பி ஆகியோருக்கு பைசல் காசிம் எம்.பி நன்றி தெரிவித்துள்ளார்.

**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# பேத்தாழை விபுலானந்தா கல்லூரியை என்றும் மறக்காத பழைய மாணவர்கள்

கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட மட்/ககு/பேத்தாழை விபுலானந்தா கல்லூரியின் பழைய மாணவர்களினால் பாடசாலையில் நிலவி வந்த பௌதீக வளங்கள் தொடர்பான குறைபாடுகள் தொடர்ச்சியாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்றுமுன்தினம்(15.08.2023) இப்பாடசாலையில் கடந்த 1990 ஆம் வருடம் தரம் 8 இல் கல்வி கற்ற பழைய மாணவன் பஞ்சலிங்கம் விமல்ராஜின் நிதிப்பங்களிப்புடன் ஒரு தொகுதி தளபாடங்கள் பாடசாலைக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

பாடசாலை அதிபர் சி.முருகவேள் மற்றும் பிரதி அதிபர்கள், நூலகத்திற்குப் பொறுப்பான ஆசிரியர், பழைய மாணவர் சங்கச் செயலாளர், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்த இந்நிகழ்வில் பாடசாலையின் நூலகத்திற்குத் தேவையான 30 பிளாஸ்டிக் கதிரைகள், ஞாயிற்றுக் கிழமைகளில் பாடசாலையில் இடம்பெறும் அறநெறி வகுப்புக்களுக்கு தேவையான 12 பாய்கள் உள்ளிட்ட பொருட்கள் குறித்த பழைய மாணவரின் சார்பாக நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அவரது வகுப்புத் தோழர்களினால் பாடசாலையின் அதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்தன. பழைய மாணவர் குழுவினால் கடந்த ஜனவரி மாதம் பாடசாலை வகுப்பறைகளுக்குத் தேவையான 100 இற்கும் மேற்பட்ட தளபாடங்கள் திருத்திக் கொடுக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.







**ம.பிரகாஷ்...** (பேத்தாழை)

# நிறுவை, அளவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடும் நடவடிக்கை

அம்பாறை மாவட்ட செயலகத்தின் அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினதும் பிரிவினரால் பல்வேறு தராசுகளை பரிசோதனை செய்து சரிபார்க்கும் சான்றிதழ் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலவணை, ஆகிய பிரதேச வியாபாரிகளின் நிறுவை/ அளவை உபகரணங்களை 2023/2024 ஆம் ஆண்டுக்கு சரிபார்த்து முத்திரை பதிப்பதறகான வேலைத்திட்டம் நான்கு தினங்களாக செயலக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியின் வழிகாட்டலில் இந்த வேலைத்திட்டம் முனெடுக்கப்பட்டது. குறித்த வர்த்தகர்கள், மீனவர்கள் தங்களுடைய வியாபார அளவை நிறுவை உபகரணங்களை எடுத்துச் சென்று முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கல்முனை பிரதேச செயலாளர் அறிவித்தல் விடுத்திருந்தார்.

இதன் போது இலத்திரனியல் தராசுகள், பாரம்பரிய தராசுகள், நிறுக்கும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு அளவீட்டுடன் கூடிய தராசுகள் சரிபார்க்கப்பட்டு சீல் செய்யப்பட்டு தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் தராசுகளின் வகைகளுக்கேற்ப தராசுகள் இனங்காணப்பட்டு இச்செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டு வந்தது. இந்த வேலைத்திட்டத்தில் வர்த்தகர்கள் மீனவர்கள் உள்ளிட்டோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மேலும் தராசுகளை பரிசோதனை செய்து சரிபார்த்து வழங்கப்பட்ட சான்றிதழ் இன்றி பல வியாபாரிகள் மோசடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது தொடர்பிலும் மக்களினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே அளவீட்டு தராசுகளுக்கான தரச்சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுமாறு அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினனும் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**பி.எம்.எம்.ஏ.காதர்...**
(மருதமுனை தினகரன் நிருபர்)

# கிழக்கின் குரல்



# மட்டு.மாவட்டத்தில் வரட்சி; 8,892 குடும்பங்கள் பாதிப்பு





## பாதிக்கப்பட்ட மக்களுக்கு பவுசர்கள் மூலம் குடிநீர் விநியோகம்

மட்டக்களப்புகுறுப்நிருபர்

நிலவும் கடும் வறட்சியினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலக பிரிவுகளில் 8,892 குடும்பங்களைச் சேர்ந்த 29,508 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் செங்கலடி பிரதேச செயலக பிரிவில் 2,561 குடும்பங்களைச் சேர்ந்த 8,805 பேர் அதிக பட்சமாக வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலக பிரிவில் 2,161 குடும்பங்களைச் சேர்ந்த 6,856 பேரும், மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் 1,729 குடும்பங்களைச் சேர்ந்த 6300 பேரும், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவில் 1438 குடும்பங்களைச் சேர்ந்த 4,341 பேரும், மண்முனை தென் மேற்கு பிரதேச செயலக பிரிவில் 853 குடும்பங்களைச் சேர்ந்த 2681 பேரும், கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலக பிரிவில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 525 பேரும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ், தேசிய அனர்த்த நிவாரண சேவை திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சியாத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ், நடைமுறைப்படுத்தப்படும் இத் திட்டத்தினூடாக, அவ்வப் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ், பிரதேச சபை பவுசர்கள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆலங்குள மக்களுக்கான ஒரு தொகுதி உலர் உணவுப் பொருட்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் கரித்தாஸ் எகெட், மட்டக்களப்பு மிசேரியோ நிறுவனத்தின் உதவியுடன், அருட்பணி அ.யேசுதாசனால் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. ஷாபிரிடம் செவ்வாய்க்கிழமை (15) கையளிக்கப்பட்ட போது. படம்;திராய்க்கேணி தினகரன் நிருபர்

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி செயலாளர் மீது தாக்குதல்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீதின் மகனும், ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் செயலாளருமான ஷாஹிட் முபாறக் (வயது 28) மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் வைத்து திங்கட்கிழமை இரவு தனது வாகனத்தில் மனைவியுடன் சென்று கொண்டிருந்த வேளை , இனந்தெரியாத இருவர் தாக்குதல் மேற்கொண்டு தலை மறைவாகியுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர் தற்போது கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்திலும் இச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளானவர் அண்மைக் காலமாக தமது கட்சி நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரவூப் செய்னின் நூல் வெளியீடு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

கலாநிதி ரவூப் செய்ன் (நழீமி) எழுதிய "முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் ஓர் இஸ்லாமிய நோக்கு" நூல் வெளியீடு மற்றும் அறிமுக விழா இன்று வியாழக்கிழமை (17) அக்கரைப்பற்று மாநகர சபை ஹல்லாஜ் வள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மனித எழுச்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நூலை "ஆய்வுக்கும் மேம்பாட்டிற்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம்" வெளியீட்டு வைக்கவுள்ளது.

இந்நூல் தொடர்பாக நூலாசிரியர் கலாநிதி ரவூப் செய்ன் சிறப்புரையாற்றுவதுடன், கல்விமான்கள், புத்திஜீவிகள் மற்றும் உலமாக்கள் என பலரும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## மாணவர்களுக்கு வீதி வழிகாட்டல்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் நகர் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களின் நலன்கருதி, வீதி போக்குவரத்து அறிவித்தல்களை வழங்க பாடசாலை நிருவாகம் கவனம் செலுத்துமாறு பெற்றோர் சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் வேண்டியுள்ளனர்.

பெற்றோர்களால் விடுக்கப்பட்டுள்ள இவ்வேண்டுதலில் தெரிவித்துள்ளதாவது, வீதி போக்குவரத்து சட்ட ஒழுங்குகளை மாணவர்கள் தெளிவாக தெரியாத நிலையில், பாடசாலை செல்லும் போதும், வெளியேறும் போதும் மிக நெருக்கடிகளை வீதிகளில் சந்திக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக போக்குவரத்து பொலிஸாரின் ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் ஒழுக்காற்று குழுவினரின் வழிகாட்டல்களை செய்யுமாறு பெற்றோர் வேண்டுகின்றனர்.

## ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்





கல்லடி குறுப்,புதிய காத்தான்குடி தினகரன் ,மட்டக்களப்புகுறுப் மட்டக்களப்பு விசேட நிருபர்கள்

மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ வெகுவிமர்சையாக நடைபெற்றது. ஆடி அமாவாசையில் பிதிர்க்கடன் தீர்க்கும் தீர்த்தோற்சவமாக மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் தீர்த்தோற்சவம் சிறப்பிடம் வகிக்கின்றது.

இராமபிரானால் வழிபட்ட ஆலயம் என்ற பெருமையைக் கொண்ட அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயம் மூர்த்தி,தீர்த்தம்,தலம் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட வரலாறு சிறப்புமிக்க தலமாக விளங்கி வருகின்றது.

வருடாந்த மஹோற்சவம் கடந்த பத்து தினங்களாக நடைபெற்று வந்ததுடன்,நேற்று புதன்கிழமை வசந்த மண்டபத்தில் விசேட பூஜைகள் நடைபெற்று, சிவன் பார்வதியுடன் மாமாங்கேஸ்வரர் உள்வீதியுலா வந்து, எருது வாகனத்தில் தீர்த்தக்கரையினை அடைந்து, மாமாங்கேஸ்வரப் பெருமானுக்கு தீர்த்தக்கேணியில் விசேட பூஜை இடம்பெற்றது.

ஆயிரக்கணக்கான அடியார்கள் புடை சூழ இத் தீர்த்தோற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

## திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய தீர்த்தோற்சவம்





வாச்சிக்குடா விஷேட ,காரைதீவு குறுப் நிருபர்கள்

### மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் பங்கேற்பு

திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் வரலாறு காணாத ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்புடன் புதன்கிழமை (16) இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவர்த்தனவும் பங்கேற்றார். ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற இத் தீர்த்தோற்சவத்தில், கிழக்கு மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம், திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் அதிசயராஜ், திருக்கோவில் உதவி பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிவபூமி என திருமூலரால் போற்றப்பட்ட இலங்காபுரியில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் வங்ககடலோரம் வீற்றிருந்து நாடிவரும் அடியவர்களின் குறை நிறைகளை தீர்த்து, செல்வத்தை வாரிவழங்கும் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் கொடியேற்றம் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றதுடன், தொடர்ந்து 15 நாட்கள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு தமிழ்ப் பிரதேச மக்களது திருவிழாவோடு இடம்பெற்றது.

அடியார்கள் புடை சூழ வங்ககடல் நோக்கி தீர்த்தோற்சவத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டதுடன், முருகப்பெருமானின் தீர்த்தோற்சவம் நடைபெற்றது. தீர்த்தோற்சவத்தில் வரலாறு காணாத ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

## காத்தான்குடியில் நாளை போதைக்கு எதிராக சமூக எழுச்சி பிரகடனம்



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடியில் நாளை வெள்ளிக்கிழமை ஜூம்ஆ தொழுகையின் பின்னர் போதை வஸ்த்துக்கு எதிரான சமூக எழுச்சி பிரகடனம் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பாக ஆராயும் விஷேட கூட்டம் காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சம்மேளன மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (15) இரவு இடம் பெற்றது.

சம்மேளன தலைவர் ரவூப் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், காத்தானாகுடி ஜம் இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி ஹாரூன், சம்மேளன பொதுச் செயலாளர் சபீல் நழீமி, சம்மேளன பொருளாளர் அன்ஸார் உட்பட சம்மேளன முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதன்போது போதை வஸ்த்துக்கு எதிரான சமூக எழுச்சி பிரகடனம் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டதுடன், தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

காத்தான்குடியில் ஊர் தழுவிய ரீதியில் எதிர்வரும் நாளை வெள்ளிக்கிழமை போதை வஸ்த்துக்கு எதிரான சமூக எழுச்சி பிரகடனம் செய்வது, அன்றைய தினம் வெள்ளிக்கிழமை ஊரில் இரண்டு பள்ளி வாசல்களில் மாத்திரமே ஜூம்ஆ நடாத்துவது, ஜும்ஆ தொழுகையை 12.45 மணிக்கு நிறைவு செய்து, குட்வின் சந்தியை நோக்கி பேரணியாக செல்லுதல். இது தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்டல் செய்வது போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# வடக்கின் உதயம்

## வட்டுவாகல் பாலத்தில் வீதி சமிக்ஞை இன்மையால் பயணிகள் அவதி

(ஓமந்தை விசேட நிருபர்)



முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்துக்கு அருகாமையில் வீதி சமிக்ஞை இல்லாமையால் பெரும் போக்குவரத்து சிரமங்களை மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

பரந்தன் முல்லைத்தீவு செல்லும் வீதியில் வட்டுவாகலில் அமைந்துள்ள பாலத்தில் வீதி சமிக்ஞை இல்லாமையால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இவ்வீதி ஊடாக பெரிய வாகனமொன்றே பயணம் செய்ய முடியும். ஏனைய வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு பெரிய வாகனம் வீதியை கடந்ததன் பின்னரே பயணம் செய்ய முடியும்.

அவ்வாறு வாகனம் வருவதனை அவதானிக்காது சென்றால், மீண்டும் ஒரு வாகனம் பின்னோக்கி சென்றதால் பயணிக்க முடியும். இவ்வாறாகவே இப்பாலத்தில் பயணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையுள்ளது.

ஆகவே இப்பாலத்தில் வீதியின் இரு பக்கங்களிலும் சமிக்ஞை விளக்குகள் அமைக்காமையால் வாகன சாரதிகள் பெரும் இடர்களை எதிர்கொள்வதாகவும் பாலத்தின் இரு பகுதிகளிலும் வீதி சமிக்ஞைகளை அமைத்து தருமாறும் மக்கள் கோரியுள்ளனர்.

### ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன்

## விவசாயக் குடும்பங்களுக்கு இலவச யூரியா உரம் வழங்கல்

(ஓமந்தை விசேட, மாங்குளம் குரூப் நிருபர்கள்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் திணைக்களத்துக்குட்பட்ட விவசாயிகள் 180 பேருக்கு யூரியா பசளை வழங்கும் நிகழ்வு கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்றது.

ஜப்பான் நாட்டின் உதவியின் கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் மூலம் (FAO) பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளும் சுமார் 1500 விவசாயிகளுக்கு இலவச யூரியா பசளை வழங்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 180 பேருக்கு நேற்றைய தினம் யூரிய உரம் வழங்கப்பட்டது.



யூரியா பசளை வழங்கும் திட்டத்தின் கீழ் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் மூலம் (FAO) பெரும்போக நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு இலவச யூரியா பசளை வழங்கும் திட்டத்தின் கீழ் விவசாயிகள் 180 பேருக்கு யூரியா பசளை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

1.25 ஏக்கர் நிலப்பரப்புக்கு குறைவாக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயி ஒருவருக்கு 25Kg யூரியா பசளையும் அதற்கு மேல் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயி ஒருவருக்கு 50Kg யூரியாவும் வழங்கி வைக்கப்பட்டது.

கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் திரு.பரணிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.







கரவெட்டி பரலோக அன்னை ஆலய திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்; கரவெட்டி தினகரன் நிருபர்)

## உணவுப் பற்றாக்குறையை தீர்க்க விசேட நடவடிக்கை

(சாவகச்சேரி விசேட நிருபர்)



இலங்கையில் நிலவி வருகின்ற உணவுப் பற்றாக்குறையை எதிர்காலத்தில் தீர்க்க முடியுமென ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய தாபனத்தின் இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி விமலேந்திரசரண் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் மக்களின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக சிறு விவசாயிகளுக்கு உரம் வழங்கும் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் விவசாயிகள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் அதற்கான தீர்வுகள் தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றோம்.

விவசாயிகள் கடுமையாக உழைத்தே அறுவடையை பெறுகின்றனர். ஜப்பான் நாட்டு மக்களுடைய உதவியில் கிடைத்த யூரியா உரம் மூலம் விவசாயிகள் பயனடைய வேண்டும். ஜப்பான் நாட்டின் உதவியின் ஊடாக எதிர்காலத்தில் நாட்டில் நிலவி வருகின்ற உணவுப் பற்றாக்குறையை தீர்க்க முடியும்.

இந்த உதவியை வழங்கிய ஜப்பான் நாட்டு மக்களுக்கு எமது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். இந்த உதவிகள் எதிர்காலத்திலும் தொடரும் என நம்புகிறோம். ஜப்பான் நாட்டின் உதவிகள் விவசாயிகளுக்கு உரிய முறையில் சென்றடைவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மற்றும் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

## சிறைக்கைதிக்கு தொலைபேசி வழங்கிய உத்தியோகத்தர் கைது

(யாழ்ப்பாணம் குறூப் நிருபர்)

யாழ். சிறைச்சாலையில் கைதியொருவருக்கு தொலைபேசி வழங்கிய குற்றச்சாட்டில் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதியொருவருக்கு தொலைபேசி வழங்கியதன் பிரகாரம் சிறைச்சாலையில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி காணொளிகளை பரிசோதனை செய்த போது சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு சிறைச்சாலை அதிகாரியினால் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் யாழ்ப்பாணம் பொலிஸார் அந்த உத்தியோகத்தரை கைதுசெய்துள்ளனர்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி பயன்பாட்டை ஆராயும் சந்திப்பு

(மாங்குளம் குரூப் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களின் காணி பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலுள்ள பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவள திணைக்களம் ,மகாவலி அதிகார சபை, வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் நடவடிக்கைகளினால் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் பறிக்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.



இதனால் பூர்வீக காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. இக்கலந்துரையாடலில் ஜனாதிபதி செயலகத்தின் பிரதிநிதி இளங்கோவன், பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான கு.திலீபன், சார்ளஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் உமா மகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் குணபாலன் (காணி), வனவளத்திணைக்களம், மகாவலி அதிகார சபை உள்ளிட்ட பல்வேறு திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



ஈழத்தமிழ் சினிமா கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக குவியம் ஊடக நிறுவனம் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்திருந்த “குவியம் விருதுகள் 2023” நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கடந்த 2022 ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படங்கள், குறும்படங்கள், காணொளிப்பாடல்கள் மற்றும் ஆவணப்படங்களிலிருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கிக்கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்; யாழ். விசேட நிருபர்)

## சமாதான நீதவான் நியமனம்



கண்டியை பிறப்பிடமாகவும் லிந்துலை பம்பரகலையை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநாதன் பாலேந்திரன் நேற்று சமாதான நீதவானாக நுவரெலியா நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.ஆர் நாலக சஞ்ஜீவ வீரசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தனது ஆரம்ப கல்வியை பம்பரகலை தமிழ் வித்தியாலயத்திலும் க.பொ.த சாதாரண தரம் வரை நு/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்திலும் க.பொ.த உயர்தரம் வரை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் தனது தொழிற்கல்வியை நுவரெலியா தொழில்நுட்ப கல்லூரியிலும் பயின்றார்.

இவர் பகுதி நேர பிராந்திய ஊடகவியலாளராகவும் செயற்பட்டுள்ளார். சிறந்த சமூக செயற்பாட்டாளராகவும் விளங்குகின்றார்.

## முழங்காவில் கால்நடை வைத்தியர்களின் அசமந்தபோக்கினால் பசுமாடுகள் உயிரிழப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி பூநகரி பிரதேசசபைக்குட்பட்ட முழங்காவில் பகுதியில் கால்நடை வைத்தியர்களின் அசமந்தபோக்கு காரணமாக வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட நான்கு கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் பகுதியில் வாழ்வாதார தேவைகளுக்காக வளர்க்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நல்லின பசு மாடுகள் நான்கு அடுத்தடுத்து உயிரிழந்துள்ளன.

பண்ணையாளர் ஒருவரது பசுமாடு நோய்வாய்ப்பட்ட நிலையில் பூநகரி கால்நடை வைத்தியரை பண்ணையாளர் தொடர்பு கொண்டபோதும் வைத்தியர் அப்பகுதிக்கு செல்லவில்லை. இதனால் மாடு உயிரிழந்தது.

அதனைத் தொடர்ந்து மறுநாள் அவரது மற்றைய பசுமாடும் அவ்வாறு நோய்வாய்ப்பட்ட நிலையில் பண்ணையாளர்களால் அவதானிக்கப்பட்டதையடுத்து இதுதொடர்பில் பூநகரி பிரதேச கால்நடை வைத்தியருக்கு அறிவித்திருந்தனர். எனினும் மூன்று நாட்களாகியும் அதற்கான உரிய சிகிச்சைகளை வழங்கப்படவில்லை. இதனால் அந்தப் பசுமாடும் உயிரிழந்தது.

இதனைவிட அப்பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் இருபண்ணையாளர்களின் பசுமாடுகளும் நோய்வாய்ப்பட்ட நிலையில் பூநகரி கால்நடை வைத்தியருக்கு அறிவித்தும் எந்தவித சிகிச்சைகளும் வழங்கப்படவில்லை. இதனால் அந்த கால்நடைகளும் உயிரிழந்தன. இவ்வாறு கால்நடைகள் உயிரிழந்தமைக்கான மருத்துவ ரீதியான ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மலைச்சாரல்

### உமாஓயா திட்டம் மக்கள் பாவனைக்காக திறப்பு

## 10இற்கு மேற்பட்ட கிராமிய குளங்களுக்கான நீர் விநியோகம்

(ஊவா சுழற்சி நிருபர்)

உமாஓய திட்டம் நேற்றுமுன்தினம் மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

அபிவிருத்தியை இலக்காக கொண்டு நாட்டின் எதிர்கால மின் உற்பத்தி மற்றும் நீர்பாசன, குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக உமாஓய திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஈரானின் நிதியுதவியுடனுடம் ஈரானிய பொறியியலாளர்களால் உமாஓய திட்டம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வெலிமடை முதல் டயரபா, பண்டாரவளை, ஹீலோய, எல்லை, இராவண எல்ல, கெந்தகொல்ல, ரந்தெனிய, வெல்லவாய வரையிலான பிரதேசங்களை உள்ளடக்கி நிலத்துக்கு கீழ் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மகாவலி நீர்பாசன மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணதுங்க, துறைமுகங்கள் விமான சேவை அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா, மகாவலி நீர்பாசன இராஜாங்க அமைச்சர் சஷிந்தர ராஜபக்ச, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மேஜர்.சுதர்ஷன தெனிபிட்டிய, ஈரான் நாட்டின் இலங்கைகான தூதுவர்.ஹஸேன் அஸ்ஸேயாவிட் ஆகியோரின் பங்குபற்றலுடன் மக்கள் பாவனைக்காக இத்திட்டம் திறந்து வைக்கப்பட்டது.





இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது அப்பகுதியிலுள்ள மக்கள் பெரும் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கினர். கிணறுகள் வற்றி குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டதால் பிரதேச மக்கள் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அரசாங்கமும் ஊவா மாகண சபையும் பவுசர்கள் மூலம் மக்கள் தேவைக்கேற்ப குடிநீர் விநியோகம் செய்தனர்.

அதுமட்டுமின்றி பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடுகளும் வழங்கி வைக்கப்பட்டது. அதுமட்டுமின்றி முழு அளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாடகை வீட்டை பெற்றுக் கொடுத்து வேறு இடங்களில் மாற்றுக் காணிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

பல மில்லியன் ரூபா செலவில் பல சிக்கலுக்கு மத்தியில் இத்திட்டத்தின் பயனாக இலங்கை மின்சார துறைக்கு புதிதாக 120 மெகா வேட் மின்சாரம் கிடைத்துள்ள அதேவேளை டயரபா முதல் மிட்டியாய, வெல்லவாய வரையிலான 10ற்கு மேற்பட்ட கிராமியக் குளங்களுக்கான நீர் விநியோகமும் சுமார் 15000 ஹெக்டயர் நெல் வயல்களுக்கான நீர்பாசன வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை, மீரஹவத்தை, வெலிமடை, மாதட்டில்ல, கஹகொல்ல, எல்ல, தெமோதர, உடுவர, ஹாலி எல்ல, பதுளை போன்ற நகரங்களிலும் தோட்ட பகுதிகளுக்கும் மொனராகலை மாவட்டத்தில் கரந்கொல்ல, ரந்தெனிய, வெல்லவாய, அதிலவெல போன்ற பிரதேசங்களுக்கும் 24 மணித்தியாலயங்களில் நான்கு மணி நேர குடிநீர் விநியோகமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 39 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது குறிப்பு இலக்கம்:-** KDS/AKU/4/2/97 சுற்றுலா மற்றும் காணி **அமைச்சின் குறிப்பு இலக்கம்:-** 4/3/5/2018HA/460

இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணித் துண்டை காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) கட்டளையின் கீழ் பிறப்பிக்கப்பட்டதும் 2021.01.12ம் திகதிய 2210/10ம் இலக்கம் கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான, 2021 இலக்கம் 04 ன் 2020 12.28ம் திகதிய கட்டளையில் கீழே விபரிக்கப்படும் காணித்துண்டு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கு சுவீகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இக்காணியின் இருப்பாட்சி இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு சார்பில் கையேற்கப்படவில்லை. அதனால், சுற்றுலா மற்றும் காணி அமைச்சரான நாலக்க ஜுட் ஹரீன் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2021.01.12ம் திகதிய 2210/10ம் இலக்கம் கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வார்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேலே சொல்லப்பட்ட 2021 இலக்கம் 04 ன் 2020.12.28ம் திகதிய கட்டளையை இக்கட்டளையின் மூலம் இரத்துச் செய்கின்றேன். அது தொடர்பில் 2023.01. 18ம் திகதிய 2315/22 ம் இலக்க வார்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : அக்குரணை |
| கிராம அலுவலர் பிரிவு | : அரம்பேபொல (இல. 584) |
| காணியின் பெயர் | : பங்களா வத்த அல்லது அரம்பேபொல வத்த |
| அடிப்படை வரைபட இலக்கம் | : மஹ 7146 |
| காணித்துண்டு இலக்கம் | : 1 |
| விஸ்தீரணம் | : 0.1877 ஹெக்டேயார் |

**ஏ.எச்.எம். இந்திகா குமாரி அபேசிங்ஹ**
**பிரதேச செயலாளர்**
**அக்குரணை**

**2023/07/27 ஆந் திகதி**
**பிரதேச செயலகத்தில்**
**அக்குரணை**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 39அ (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்துக் கொள்ளல் சட்டத்தின் 38(ஆ) துணை விதியின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்டதும் இலக்கம் 1823/8 மற்றும் 2013 ஆகஸ்ட் 13ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் விளம்பரப்படுத்தப்பட்டதும். 2013 இலக்கம் 249ஆம் கட்டளையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணி முற்று முழுதாக இலங்கை சனநாயக சோஷலி சக் குடியரசின் அரசுடையதாக்கப்பட்டிருந்ததோடு, குறித்த கட்டளைச் சட்டத்தின் 40ஆம் பிரிவின் (அ) அத்தியாயத்தின் கீழ் காணித்துண்டுகளின் உரிமை எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அச்சரத்தின் (1979 இலக்கம் 8ஆம் சரத்தில் உட்பட்ட) 39 (அ) 1ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் சுற்றலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுடி ஹரீன் பிரநான்து ஆகிய நான் குறித்த காணித் துண்டுகளில் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டை மாத்திரம் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்கின்றேன்.

**ஹரீன் பிரநான்து**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்**
**எனது குறிப்பு இலக்கம்:- 4-3/15/2013/VE/45**
**பிரதேச செயலகத்தின் குறிப்பு இலக்கம் PAS/LND/ACQVI/07/F1/249B/62**

**2023 ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி,**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**1200/6 'மிஹிகத மெதுர'**
**ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.**

**அட்டவணை 1**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவின் மொரவக்கோறளை கிழக்கு சிறு பிரிவு, ஊருபொக்க (ஆ.கி.பட.23) கிராமத்தில் அமைந்துள்ளதும் 2013.07.02ஆம் திகதி நில அளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் MR/PSG/2013/300 படத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளுக்கான பெயர்கள் எல்லைகள் மற்றும் விஸ்தீரணங்கள் பின்வருமாறாகும். (மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2332/37 மற்றும் 2023.05.19ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்க்கவும்)

| | |
|---|---|
| 01. துண்டு குறியீடு | A- ஹீகொட கும்புர - விஸ்தீரணம் 0.0941 ஹெக்டயார். |
| 02. துண்டு குறியீடு | B- ஹீகொட கும்புர - விஸ்தீரணம் 0.0648 ஹெக்டயார். |
| 03. துண்டு குறியீடு | C- பெயர் குறிப்பிடப்படவில்லை - விஸ்தீரணம் 0.0058 ஹெக்டயார். |
| 04. துண்டு குறியீடு | D- கிரிமெடிதெனிய - விஸ்தீரணம் 0.0178 ஹெக்டயார் |
| 05. துண்டு குறியீடு | E- கிரிமெடிதெனிய - விஸ்தீரணம் 0.0331 ஹெக்டயார் |

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

## 39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1979 ஜுலை மாதம் 20 ஆம் திகதிய 46 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 327 ஆம் இலக்க 1979.06.08 ஆம் திகதிய கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் I அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

.......................................................
**ஹறின் பெர்னாண்டோ**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்**

**எனது இல: 03J/75/E/611**
**பிரதேச செயலாளர் இல: OPDS/LND/R.PAL.VI/09/04**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**"மிஹிகத்த மெதுர"**
**காணிச் செயலகம்,**
**இல. 1200/6 இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.**
**2023.08.15**

I **அட்டவணை**

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், ஓபநாயக்க பிரதேச செயலாளர் பிரிவில், ஹெலபல்ல பலாத சிறு பிரிவில், மாதொல (இ.கி.வ.203) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.12.19 ஆம் திகதிய, R/OPN/2018/556 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ள பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லை:

01. **துண்டு இல B - வடுகெஹேன்யாய - விஸ்தீரணம் : 0.0379 ஹெக்டயார்**

| | |
|---|---|
| **வடக்கு** | : துண்டு எழுத்து A, வீதி மற்றும் துண்டு எழுத்து C |
| **கிழக்கு** | : துண்டு இல 1197, துண்டு எழுத்து C மற்றும் துண்டு இல $230^{C}$ |
| **தெற்கு** | : துண்டு இல $230^{C}$ மற்றும் துண்டு இல 230 |
| **மேற்கு** | : துண்டு இல 230 மற்றும் வீதி |

மேலும் விபரங்களுக்கு மேலே உள்ள வர்த்தமானி அறிவிப்பைப் பார்க்கவும்

பாதுகாப்பு அமைச்சு

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

## சுத்திகரிப்புச் சேவைப் பெறுகை – 2023/2024

1. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 2023/2024ஆம் ஆண்டிற்காக சுத்திகரிப்புச் சேவை பெறுகைக்காக தகுதியுடைய மற்றும் தகைமை கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்படட கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | விபரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறி தொகை (ரூ) |
|---|---|---|
| NBRO/AD/2023/328 | சுத்திகரிப்புச் சேவைப் பெறுகை | 10,000.00 |

2. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமை (NCB) இன் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.
3. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்களை 2023.08.17 முதல் 2023.09.05 வரை அலுவலக வேலை நாட்களில் மு.ப. 5.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கீழ்க்காணும் முகவரியில் பதில் பணிப்பாளர் (நிர்வாகம்) இடம் பெற்றுக்கொண்டு கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இது பற்றிய ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எழுத்துமூல வேண்டுதலை மேற்கொண்டு மற்றும் மீளளிக்கப்படாத ரூபா ஆயிரத்து ஐந்நூறு (ரூ. 1500.00) ஐ கணக்குப் பிரிவிற்கு செலுத்திய பின்பு அப்பிரிவில் 2023.08.17 முதல் 2023.09.05 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம்.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் பிரதியொன்றுடன் 2023.09.06 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கேள்வி உள்ளிடும் பெட்டியில் கொணடு வந்து உள்ளிடல் வேண்டும் கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"சுத்திகரிப்புச் சேவை - 2023/2024"** என்று குறிப்பிடுதல் கட்டாயமாகும். தாமதமாகக் கிடைக்கும் அல்லது பெக்ஸ் மூலம் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். அந்நேரம் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன், கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்த சகல கேள்விதாரர்களுக்கும் அல்லது பிரதிநிதியொருவருக்கு கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தலைவர்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05.**
**தொலைபேசி: 011-2588946**
**பெக்ஸ்: 011-2502611**

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.07.11 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு D.U. மனோதர அத்தாட்சிப்படுத்திய 2014.10.02 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1392 மற்றும் 2015.06.29 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1647 மற்றும் பிரசித்த நொத்தாரிசு R.D.S.K. நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2017.11.28 திகதியிட்ட ஈட்டு முறி இல.33 ஆகியவற்றின் பேரில் (மிகிந்தலை, நாமல்வெவ, "சுசிரி" எனும் முகவரியில் அமைந்த M/S ரவிந்து பாமசி அன்ட் புக் ஷொப் ஏக உரிமையாளர்) திருமதி திசாநாக்க முதியான்சேலாகே சுபானி மஹீஷா திசாநாயக்க என்பவரிடமிருந்து 1ஆவது நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது 2023.03.21 வரை முதலும் வட்டியும் ரூ.3,229,945.19. (மூன்று மில்லியன் இருநூற்று இருபத்தொன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தைந்து ரூபாய்களும் பத்தொன்பது சதங்களும்) அத்துடன் நிலுவை முதல் ரூ. 2,000,000.00 (இரண்டு மில்லியன் ரூபாய்கள்) மீது ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து (29.25%) வீதத்தில் 2023.03.22 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேலும் வட்டியும் 2ஆவது நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது 2023.03.27 வரை முதலும் வட்டியும் ரூ. 9,416,301.36 (ஒன்பது மில்லியன் நானூற்றுப்பதினாறு ஆயிரத்து முந்நூற்றொரு ரூபாய்களும் முப்பத்தாறு சதங்களும் அத்துடன் நிலுவை முதல் ரூ.6,000,000.00 (ஆறு மில்லியன் ரூபாய்கள்) மீது ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து ஐந்து (29.25%) வீதத்தில் 2023.03.22 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேலும் வட்டியும் 3ஆவது நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது 2023.03.21 வரை முதலும் வட்டியும் ரூ.6,459,878.40 (ஆறு மில்லியன் நாநூற்று ஜம்பத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தெட்டு ரூபாய்களும் நாற்பது சதங்களும்) அத்துடன் நிலுவை முதல் ரூ. 4,000,000.00 (நான்கு மில்லியன் ரூபாய்கள்) மீது ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து (29.25%) வீதத்தில் 2023.03.22 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு D.U மனோதர அத்தாட்சிப்படுத்திய 2014.10.02 திகதியிட்ட ஈட்டுமுறி இல.1392 மற்றும் 2015.06.29 திகதியிட்ட ஈட்டு முறி இல.1647 மற்றும் பிரசித்த நொத்தாரிசு R.D.S.K. நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2017.11.28 திகதியிட்ட ஈட்டு முறி இல.33 ஆகியவற்றின் பேரில் 1ஆவது நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது ரூ.3,229,945.19 (மூன்று மில்லியன் இருநூற்று இருபத்தொன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தைந்து ரூபாய்களும் பத்தொன்பது சதங்களும்) 2 ஆவது நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது ரூ. 9,416,301,36 (ஒன்பது மில்லியன் நாநூற்றுப் பதினாறு ஆயிரத்து முந்நூற்றொரு ரூபாய்களும் முப்பத்தாறு சதங்களும்) 3 ஆவது நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது ரூ.6,459,878.40 (ஆறு மில்லியன் நாநூற்று ஜம்பத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தெட்டு ரூபாய்களும் நாற்பது சதங்களும்) அத்துடன் 2023.03.22 தொடக்கம் விற்பனைத் திகதி மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடு வைத்த இங்கு கீழ் முதலாவது அட்டவணையில் விபரித்த சொத்தை இங்கு கீழ் இரண்டாவது அட்டவணையில் விபரித்த பாதை ஒதுக்கங்கள் உடன் பாதை மீது சம்பந்தப்பட்ட சகல உரிமைகள் மற்றும் வழி உரிமையுடன் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. (50/3,) விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு M.H.T. கருணாரத்னவுக்கும் மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21க்கமைய இவ் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கலென்பிந்துனுவெவ கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

வடமத்திய மாகாணம் அநுராதபுர மாவட்டம் கனதர கோறளை, நுவரகம் பலாத்தயில் கண்டு துலானயில் மிகிந்தலை பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் நாமல்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 579 இல் வேலன் குளம கிராமத்தில் அமைந்த "கீரியகஹ லந்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.B. இலங்கசிங்ஹ தயாரித்த 2008.03.16 திகதியிட்ட வரைபடம் இல. 2008/An/109 ,ல் விபரித்த காணித்துண்டு 04 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் F.V.P.761 இல் காணித்துண்டு 22உம், கிழக்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 2உம் தெற்கில் மேற்கூறிய வரைபடத்தில் பாதை ஒதுக்கம் காணித்துண்டு 5உம் மேற்கில் F.V.P. 761,ல் காணித்துண்டு 22 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 ,ன் பிரகாரம் ஒரு றூட் முப்பத்து நான்கு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.01, பே.34) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி அநுராதபுரம் மாவட்ட காணிப்பதிவகத்தில் E 01/165ல் பதிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் N.B ஏக்கநாயக்க தயாரித்த 2014.05.31 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.1691 இன் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய வேலன் குளம கிராமத்தில் அமைந்த "கீரியகஹ லந்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் N.B. ஏக்கநாயக்க தயாரித்த 2014.05.31 திகதியிட்ட வரைபடம் இல.1691 ,ல் விபரித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் F.V.P.761 இல் காணித்துண்டு 22உம், கிழக்கில் வரைபடம் இல. 2008/An/109 இல் காணித்துண்டு 2 உம் தெற்கில் மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இல் காணித்துண்டு 5உம் மேற்கில் F.V.P. 761 இல் காணித்துண்டு 22 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல.1691 இன் பிரகாரம் ஒரு றூட் முப்பத்து நான்கு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.01, பே.34) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

01. மேற்கூறிய வேலன் குளம கிராமத்தில் அமைந்த "கீரியகஹ லந்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் P.B. இலங்கசிங்ஹ தயாரித்த 2008.03.16 திகதியிட்ட வரைபடம் இல.2008/An/109 இல் விபரித்த காணித்துண்டு 08 (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 08 வடக்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 3உம், கிழக்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 1 உம் தெற்கில் F.V.P. 761,ல் காணித்துண்டு 22 1 உம் மேற்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 07 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இன் பிரகாரம் பதினொரு தசம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.11.5) விஸ்தீரணமுடைய காணி ஆகும்.
2. மேற்கூறிய வேலன் குளம கிராமத்தில் அமைந்த "கீரியகஹ லந்த" என அழைக்கும் காணி மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இல் விபரித்த காணித்துண்டு 03 (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 03 வடக்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 2உம், கிழக்கில் F.V.P.761 இல் காணித்துண்டு 22Gஉம் தெற்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு மற்றும் காணித்துண்டு 08 பாதை ஒதுக்கமும் மேற்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 05 பாதை ஒதுக்கம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இன் பிரகாரம் ஐந்து தசம் ஏழு பேர்ச்சுகள் (ஏ.0 றூ.0 பே.5.7) விஸ்தீரணமுடைய காணி ஆகும்.
3. மேற்கூறிய வேலன் குளம கிராமத்தில் அமைந்த "கீரியகஹ லந்த" என அழைக்கும் காணி மேற்கூறிய வரைபடம் இல. 2008/An/109 இல் விபரித்த காணித்துண்டு 05 பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 05 வடக்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 4உம், கிழக்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 03 - பாதை ஒதுக்கம் தெற்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 06 மற்றும் 08 (பாதை ஒதுக்கம்) மேற்கில் F.V.P.761 இல் காணித்துண்டு 22உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல். 2008/An/109 இன் பிரகாரம் ஐந்து தசம் ஏழு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.5.7) விஸ்தீரணமுடைய காணி ஆகும்.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திருமதி M.Y.D. மெடொன்சா**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**கலென்பிந்துனுவெவ.**
**2023.07.19**

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

28.07.2023 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு எஸ்.ஏ.டி.பி.ஆர் குணவர்தன அத்தாட்சிப்படுத்திய 2015.07.20ஆம் திகதிய 1102ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.12.10ஆம் திகதிய 1238ஆம் இலக்க ஈட்டுமுறி, என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது தவணைக் கடன் மீது 2023.06.27 வரையான வட்டியும் முதலுமாக 13,647,868.99 ரூபாயும் (பதின்மூன்று மில்லியன் அறுநூற்று நாற்பத்தேழாயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டு ரூபாய் தொண்ணூற்றொன்பது சதம்) அத்துடன் 2023.06.28ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தெட்டுச் சதம் இரண்டு ஐந்து வீதப்படி (28.25%) 6,666,666.64 ரூபாய் (ஆறு மில்லியன் அறுநூற்று அறுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபாய் அறுபத்து நான்கு சதம்) மீதான மேலதிக வட்டியும் இரண்டாவது தவணைக் கடன் மீது 2023.06.27 வரையான வட்டியும் முதலுமாக 6,725,925.86 ரூபாயும் (ஆறு மில்லியன் எழுநூற்று இருபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தைந்து ரூபாய் எண்பத்தாறு சதம்) அத்துடன் 2023.06.28ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தெட்டுச் சதம் இரண்டு ஐந்து வீதப்படி (28.25%) 3,305,190.30 ரூபாய் (மூன்று மில்லியன் முந்நூற்றைந்தாயிரத்து நூற்றுத் தொண்ணூறு ரூபாய் முப்பது சதம்) மீதான மேலதிக வட்டியும் 15/1 A, உடுமுல்லை பாதை, பாகொட வீதி, நுகேகொட என்ற முகவரியில் அமைந்துள்ள TYG என்ரபிறைசஸ் நிறுவனத்தாரிடமிருந்து (இதன் பணிப்பாளர்கள்: 15/1 A, உடுமுல்லை பாதை, பாகொட வீதி, நுகேகொட என்ற முகவரியைச் சேர்ந்த திரு. நம்புகரவசம் வக்வெல்ல கமகே துஷார கமிந்த மற்றும் திரு. நாணயக்காரவசம் வக்வெல்ல கமகே லோரன்ஸ்) வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. மேற்குறித்த 2015.07.20ஆம் திகதிய 1102ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.12.10ஆம் திகதிய 1238ஆம் இலக்க ஈட்டுமுறி, என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது தவணைக் கடன் மீதான மேற்குறித்த 13,647,868.99 ரூபாயையும் (பதின்மூன்று மில்லியன் அறுநூற்று நாற்பத்தேழாயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டு ரூபாய் தொண்ணூற்றொன்பது சதம்) இரண்டாவது தவணைக் கடன் மீதான மேற்குறித்த 6,725,925.86 ரூபாயையும் (ஆறு மில்லியன் எழுநூற்று இருபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தைந்து ரூபாய் எண்பத்தாறு சதம்) அத்துடன் 2023.06.28ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நுகேகொட அதிமேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

15/1 A, உடுமுல்லை பாதை, பாகொட வீதி, நுகேகொட என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட "அம்பகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.எஸ்.ரி.பி. சேனாதீர தயாரித்த 1988.06.23ஆம் திகதிய 1678ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பள்ளே பற்று ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இல.519/A பாகொட கிராம சேவகர் பிரிவிலுள்ள பாகொட பிரதேசத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் ஜி.ஆர். பெரேராவின் ஆதனத்தையும் காணித்துண்டுகள் A மற்றும் 5 என்பவற்றையும் கிழக்கில் இல. 13(1-3) உடுமுல்ல பாதை என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் தெற்கில் காணித்துண்டு 2ஐயும் மேற்கில் காணித்துண்டு 06 மற்றும் ஜி.ஆர். பெரேராவின் ஆதனம் என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 1678ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் பத்துத் தசம் பத்து பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே10.10) பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த, நுகேகொட காணிப் பதிவகத்தில் பக்கம் A 267/106 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1678ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்குறித்த காணித்துண்டு 01 உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.டி. எதிரிவிக்ரம தயாரித்த 2015.06.19ஆம் திகதியிட்ட 4065ஆம் இலக்கத்தைக் கொண்ட அதன் அண்மைய வரைபடத்தில் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

15/1 A, உடுமுல்லை பாதை, பாகொட வீதி, நுகேகொட என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட "அம்பகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.டி. எதிரிவிக்கிரம தயாரித்த 2015.06.19ஆம் திகதிய 4065ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பள்ளே பற்று ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இல.519/A பாகொட கிராம சேவகர் பிரிவிலுள்ள பாகொட பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கில் இல. 15B/1 மற்றும் 15 உடுமுல்ல பாதை என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் கிழக்கில் இல. 13 உடுமுல்ல பாதை என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் தெற்கில் இல. 15 1B உடுமுல்ல பாதை என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் மேற்கில் 1768ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 06ஐயும் (பாதை) எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 4065ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் பத்துத் தசம் பத்து பேர்ச்சுகள் (ஏ0- ரூ0- பே10.10) பரப்பளவைக் கொண்டுள்ளது.

மேலும் இக்காணித்துண்டானது 4065ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள மேற்கெல்லை, உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.எஸ்.ரி.பி. சேனாதீர தயாரித்த 1988.06.23ஆம் திகதிய 1678ஆம் இலக்க வழியுரிமையையும் பாதை மீதான வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5 மற்றும் 6 என்பவற்றை எல்லையாகக் கொண்ட கொண்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**திருமதி எச்.ரி.எஸ். மொஹோட்டி**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**நுகேகொட அதிமேற்தரக் கிளை**

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. கேபீஆர்/காணி/சுவீVI/01/25-X1
சுற்றுலா மற்றும் காணி அமைச்சு இல. 4-3/6/2019/ஏச்டபிள்யூ/34

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.03.07ஆம் திகதிய 2322/11 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி (III) ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தென் |
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கிரிந்த புஹுல்வெல்ல |
| கிராமசேவகர் பிரிவு | : இல. 327, வலகந்த மேற்கு |
| கிராமம் | : வலகந்த |
| காணியின் பெயர் | : மில்லகஹ கும்புர உட கல்ல, மில்லகஹ கும்புர, அத்மகா அலியஸ் மஹஎல்லேலந்தஹேன, வெரலுகஸ்தெனிய |
| ஆரம்ப வரைபட இல. | : மார - 2880 |
| துண்டு இலக்கங்கள் | : 01 - 11 (11 துண்டுகள்) |
| விஸ்தீரணம் | : 0.3932 ஹெக்டயார் |

**ஏ.ஜீ.டபிள்யூ.ரீ. ராஜபக்ஷ**
**பிரதேச செயலாளர் மற்றும் சுவீகரித்தல் அதிகாரி,**
**கிரிந்த புஹுவெல்ல.**

**பிரதேச செயலாளர்,**
**கிரிந்த புஹுவெல்ல.**
15.08.2023

## காணி சுவீகரித்தல் சட்டத்தின் (460 அத்தியாயம்) 39 இல(1) ஆவது பிரிவின் கீழ் மீட்டெடுப்பதற்கான அறிவித்தல்

இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணையில் விபரிக்கப்படும் காணித் துண்டு மட்டும் இந்த விதியின் மூலம் மீட்டெடுக்கப்பட்டது. மேலதிக விபரங்கள் தொடர்பாக 2324/52 மற்றும் 2023.03.24 திகதியின் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தெற்கு |
| மாவட்டம் | : காலி |
| பிரதேச செயலகப் பிரிவு | : நான்கு கடவைகள் - காலி |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 101 ஈ மலிகஸ்பே |
| கிராமத்தின் பெயர் | : மலிகஸ்பே |
| காணியின் பெயர் | : - |
| திட்ட இலக்கம் | : |

முன்னேற்றத்திட்டத்தின் வரைபட இலக்கம் 810019, வலய 02 பத்திரம் 05

துண்டு இலக்கம் : 375

**பிரதேச செயலகம்**
**காலி - நான்கு கடவைகள்**
**2023.07 மாதம் 20 திகதி**

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகார சபை

**இரத்துச் செய்தல் பற்றிய அறிவித்தல்**

**கடவத்தை கலப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக முதலீட்டு முன்மொழிவுகளை கோருதல்**

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான கடவத்தையில் அமைந்துள்ள காணியொன்றில் கலப்பு அபிவிருத்தி செயற்றிட்டமொன்றை செயற்படுத்துவதற்காக முதலீட்டு முன்மொழிவுகளைக் கோருதல் (RFP) தொடர்பில் 2023 ஆகஸ்ட் 13ஆம் திகதிய ஞாயிறு வாரமஞ்சரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளரம்பரம் இரத்துச் செய்யப்படுகின்றது.

அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட ஏனைய செயற்றிட்டங்களுக்கான விலைக்கோரல்/முதலீட்டு முன்மொழிவுகளைக் கோருதல் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை இணக்கக் குழு,
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 12ஆம் மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

### பிரேல் அச்சு இயந்திரத்திற்கான அச்சிடும் காகிதங்களின் பெறுகை - 2024

**(ஒப்பந்த இல. EPD/F08/06/2023)**

01. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவத்தைக் கொண்ட தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பிரேல் அச்சு இயந்திரத்திற்கான அச்சிடும் காகிதங்களின் பெறுகைக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன. 06 முதல் 08 வாரங்களில் விநியோகம் எதிர்பார்க்கப்படுகின்றது. சகல விலைமனுக்களுடனும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| விபரங்கள் | விலைமனுப் பிணை முறி |
|---|---|
| அச்சிடும் காகிதங்கள் | ரூபா 75,000.00 |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் அடிப்படையில் (NCB) விலைக்கோரல்கள் இடம்பெறும்.
3. இதில் ஆர்வம் காட்டும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் (06ஆம் மாடி), பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2787515) மற்றும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 செப்டெம்பர் 06ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் மீளளிக்கப்படாத கட்டணமாக 2000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்தி மற்றும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெறுகைப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. விலைமனுக்களை 2023 செப்டெம்பர் 07ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் பத்தரமுல்ல, 'செத்சிறிபாய', கல்வி வெளியீட்டுத் திணைக்களம், (6ஆம் மாடி) நிதிப் பிரிவிற்குக் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்து உடனடுத்து பின்வரும் முகவரியில் சமுகம் தந்துள்ள விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,**
**நிதிப் பிரிவு (6ஆம் மாடி),**
**"இசுறுபாய", பெலவத்த,**
**பத்தரமுல்ல.**
2023-08-17.

## காணி எடுத்தற் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டத்தின், கோணபீனுவல பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் கல்லல கமாச்சகெய் லக்ஷ்மி காந்தி ஆகிய என்னால் காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 33ஆம் பிரிவின் கீழ் பின்வரும் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விபரிக்கப்பட்டுகின்ற காணியினை எடுத்துக் கொள்வதற்காக உரிய நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக நட்டஈட்டுத் தொகையான ரூபா. ஆயிரம் (ரூபா 1000/=)தொகையினை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக காலி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் LA/786 இன் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன், மேலதிக விபரங்களுக்காக இலக்கம் 2336/86. மற்றும் 2023 ஆனி 17 தேதியிட்டது திகதிய அரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையினைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

01. பிரதேச செயலாளர் - கோணபீனுவல
02. அடிப்படை நிலத்துண்டு இலக்கம் - 3876
03. நிலத்துண்டு இலக்கம் - 94
04. நிலத்துண்டுகளின் எண்ணிக்கை - 01
05. மொத்தக் காணியின் அளவு- 0.0003(ஹெக்ரயார்)
06. காணி அமைந்துள்ள கிராமம்/கிராமங்கள் பத்தன ஆரச்சிகந்த கிராமம் /(59A/1 ஆரச்சிகந்த கிராம சேவகப் பிரிவு)
07. அமைவு -
    வடக்கே- நிலத்துண்டு இலக்கம் 93
    கிழக்கே- மார்க்கம்
    தெற்கே - உரிமையாளர்களின் பெயர்களைத் தேடிக்கொள்ள முடியாத அத்தரவத்தை
    மேற்கே - நிலத்துண்டு இலக்கம் 93

**அமைவு**

